உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-159

ஏப்ரல் 1-16 2023

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்




e-magazine
www.aanmeegamalar.com e-magazine
www.aanmeegamalar.com e-magazine

## குருகுல கல்வியை அழித்து மூளையில் குப்பையை திணித்த ஆங்கிலேயன்

# அகத்தியரின் கர்ம காண்டமும் ஏழு பிறவிகளின் விளக்கமும்?

# பித்ருக்களை முன்னோரிடம் சேர்க்கு நந்தியம் பெருமான்



ஒவ்வொருவரும் மரணம் அடைந்த பின்னர். 11 நாள் கிரியையில் உழல்வார்கள்.

இதுபோன்ற ஆத்மாவை எம தர்மனிடமிருந்து மீட்டு பிரேத சரீரம் போய் சிவனருள் மூலம் ரிஷப உத்ஸ்ஜர்னம் மூலமாக, பித்ரு தேவதையாக்க பட்டு, மூதையார்கள் இருக்கும் பித்ரு லோகம் கொண்டு செல்லப்படும்.

அவ்வாறு செல்லும் பித்ரு, ரிஷபத் தின் வாலை பிடித்து கொண்டு பல நரககங்கள் கடந்து பித்ரு லோகம் சென்றடை கிறது.

இது வேதத்தில் உள்ள அந்தி யேஷ்டி கர்மாவின் ஒரு பகுதியில் கூறப்பட்டுள்ளது.

இதை மெய்ப்பிக்கும் வகையில், ஹிமாச்சல பிரதேஷ் மாநிலம், காங்ரா மாவட்டம் பைஜ்நாத்தில் உள்ள அருள்மிகு வைத்தியநாதர் ஆலயத்தில் ஆன்ம நந்தியின் சிலையில் நந்தியெம் பெருமானின் வாலைப் பிடித்து பித்ரு தொங்கிக் கொண்டிருப்பது போல வடிவமைத்துள்ளனர்.

ஆன்ம நந்தியின் வாலில் இருப்பது மானிட ஆத்மா.

11 நாட்கள் இவ்வாறு நந்தியின் வாலில் தொங்கிய ஆத்மா 12 நாள் கிரியை சபிண்டிகரணம் என்று கூறப்படும் வகையில் மனித ஆத்மா மூதையார்களுடன் இணைந்துவிடும்.

## யாரை எப்போது நினைப்பது

- மருந்துண்ணும்போதில் விஷ்ணுவை நினை!
- விருந்துண்ணும் போதில் ஜனார்த்தனனை நினை!
- உறங்கும்போது பத்மநாபனை நினை!
- விவாஹநேரம் ப்ரஜாபதியை நினை!
- போர்களத்தில் சக்ரதாரியை நினை!
- பயணம்செய்கையில் த்ரிவிக்ரமனை நினை!
- அந்திம நேரத்தில் நாராயணனை நினை!
- சங்கமநேரத்தில் ஸ்ரீதரனை நினை!
- துர்ஸ்வப்ன அவஸ்தையில் கோவிந்தனை நினை!
- சிரமம் வரும்போது மதுஸூதனனை நினை!
- வனமிடையே நரஸிம்மனை நினை!
- கனலிடையே ஜலஸாயியை நினை!
- நீர்நடுவில் வராஹனை நினை!
- மலைஇடையே ரகுநந்தனை நினை!
- நடக்கும்போது வாமனனை நினை!
- நடக்கும் செயல்யாவிலும் மாதவனை நினை!..

# நிரந்தரமாக தங்கும் மறைந்து போகும் செல்வம்

செல்வத்தை மூன்றுவகையாக பிரித்து கூற லாம். இந்த மூன்று வகை செல்வங்களில் நிரந்தர செல்வம், மறையும் செல்வம் என்ற வேறுபாடும் உள்ளது. அந்த வகையில் மூன்றுவகையான செல்வங்களில் எது நிலையானது, எது தற்காலிக மானது என்பதைப் பற்றி பார்ப்போம்.

1. லட்சுமி செல்வம்,
2. குபேர செல்வம்,
3. இந்திர செல்வம் எனப்படும்.

**லட்சுமி செல்வம்:**

பாற்கடலை, மந்தார மலையை மத்தாகவும் வாசுகி பாம்பைக் கயிறாகவும் கொண்டு தேவர் கள் வாலையும் அசுரர்கள் தலையையும் பிடித்துக் கடைய, சந்திரன், ஐராவதம், காமதேனு,தன்வந்திரி இவர்களுடன் மகாலட்சுமியும் வெளிப்பட்டாள்.

இந்த மகாலட்சுமிதான் இந்திரன் இழந்த செல் வத்தை மீண்டும் அவனுக்குக் கொடுத்தாள்.

மேலும் குபேரனை அளகாபுரிக்கு அதிபதியாக ஆக்கினாள். கிருஷ்ணனின் நண்பனான குசேல னுக்கு அளவற்ற நிதியைக் கொடுத்தாள்.

இவளின் கடைக்கண் பார்வை தன்மேல் விழாதா என ஏங்கித் தவிக்கும் உள்ளங்கள் பல. இந்த மகாலட்சுமியின் அருளைப் பெற்றவர் களுக்கு பதினாறு வகையான பேறுகளும் வந்து சேரும்.

லட்சுமி செல்வத்தைப் பெற்றவர்களுக்கு மதி மயக்கம் தோன்றாது. இந்தச் செல்வத்தைப் பெற்றவர்கள் மற்ற மனிதர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வார் கள். தர்ம வாழ்வை மேற்கொள் வார்கள். இந்த செல்வம் ஏழு தலை முறையை தாண்டி நிலைத்து நிற்கும். இந்த செல்வம் வளர் பிறை சந்திரனைப் போன்று ஓங்கி வளரும். இயல்பிலேயே கொடை உள்ளம் கொண்டவர்களின்மீது தான் லட்சுமியின் கடைக் கண் பார்வை படும்.

**குபேர செல்வம் :**

குபேரனின் தகப்பனார் ஒரு ரிஷி. தாயாரோ அசுர குலத்தைச் சேர்ந்தவர். குபேரன் ராவணனுக்கு சகோதர முறை. அந்தச் சகோதரனாலேயே இவரது நகரம் கைப்பற்றப்பட்டு விட, லட்சுமியின் அருளால் தனி நகரத்தை ஏற்படுத்திக் கொண்டார்.



இவர் தவம் செய்து அந்தத் தவ பலத்தினால் சங்கநிதி, பதுமநிதி போன்ற நவநிதிகளுக்கும் அதிபதியானார்.

குபேரனை ஒருவர் மனமுருகிப் பிரார்த்தித்தால், குபேரன் வழங்கும் குபேர செல்வம் அந்த பக்த ருக்கு திடீர் செல்வமாக வந்து சேரும்.

அதாவது லாட்டரி, அறக்கட்டளைகளை ஏற் படுத்தி அடையும் சுய லாபம் போன்றவையே அச்செல்வங்கள். திடீரென இந்த செல்வம் எப்படி ஒருவருக்கு வந்ததோ அதைப் போன்றே விரைவில் மறைந்துவிடவும் செய்யும்.

எனவே இத்தகைய செல்வத்தை பெற்றவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடு மரம் நடுதல், அன்ன தானம், படிக்கும் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்குதல், ஏழைப் பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பது போன்ற பொதுக் காரியங்களுக்குச் செலவழிக்க வேண்டும்.

மூன்று தலை முறைகள் வரையிலாவது அந்த செல்வம் கீழிறங்காமல் நிலைத்திருக்கும்.

**இந்திர செல்வம்:**

போகி என்ற பண்டிகையை இந்திரனை முன் வைத்தே கொண்டாடுகிறோம். கிழக்கு திக்கின் அதிபதியாகத் திகழும் இந்திரன், தேவர்களின் தலைவனும் கூட, இந்திரனைப் பிரார்த்திப் பவர்கள் வெகு சிலரே.

பசு, வீடு, அரச போகம் மற்றும் பொன் பொருள் சேர்க்கை போன்றவை இந்திர சம்பத்தின் அடை யாளங்கள்.

இந்திரன் அருளால் அடையும் செல்வம் மூன்று தலைமுறைகள் வரை வருவது அரிதிலும் அரிது. சிலருக்கு ஒரே தலை முறையில் கூடமறைந்து விடும்.



# நுனிப்பகுதியும் மகாலட்சுமியின் வாசமும்

ஒவ்வொரு தெய்வங்களும் ஒவ்வொரு இடத்தில் வாசம் செய்வார்கள், அந்த வகையில் மகாலட்சுமிக்கு உரிய இடம் நுனிப்பகுதி.

கை, கால்களின் நுனி விரல் ஆனாலும். இலைகளின் நுனி ஆனாலும் சரி. பழங்களின் நுனி ஆனாலும் சரி. நாக்கின் நுனியாக இருந்தாலும் அந்த இடங்களில் மகாலட்சுமிக்கு உரிய ஸ்தான இடமாகும்,

இதனால்தான் நமது முன்னோர்கள் நகங்களை ஒட்ட ஒட்ட வெட்டக்கூடாது என்று கூறினர்.

குறிப்பாக விரத நாட்கள், வெள்ளி, செவ்வாய், சனி, பௌர்ணமி, அமாவாசை போன்ற நாட்களிலும் சந்தி வேளையான காலை, மாலை வேளையிலும் ராகு எமகண்ட வேளையிலும் உச்சிகால வேளையிலும் நகம் வெட்டுவதோ. பற்களால் கடிப்பதோ கூடாது.

அதேப்போன்று எப்போது நகம் வெட்டினாலும் மிக சிறிதளவாவது நகம் விட்டு மீதத்தை வெட்ட வேண்டும்.

வெட்டிய நகத்தை மணலில் புதைத்துவிட வேண்டும். இந்த செயல் உடல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

எக்காரணம் கொண்டும் வெட்டப்பட்ட நகத்தை நெருப்பில் போடக்கூடாது. வெட்டிய நகம் பிணத்திற்கும், ரத்தத்திற்கும் சமம்.

எனவே நகம் வெட்டிய பின்பு அது தீட்டு பொருளாகும் எனவே நகத்தை வெட்டிய உடன் அப்புறப்படத்துவதே நல்லது இல்லையேல்

வசிக்கும் இடத்தில் தரித்திரம் குடி கொள்ளும்.

இதேப்போன்று நுனி நாக்குலட்சுமி குடி கொண்ட இடமாகும், மகா சரஸ் வதியும். மகா லட்சுமி யும் ஆட்சி செய்யும் நாக்கில் சுப வார்த்தை கள் எதை பேசினாலும் அதன் பலனை நமக்கும்கொடுப்பார் கள்.

இதனால்தான் நாக்கில் மிக சூடான பொருட்கள் சுவைக் கும் போது நுனி நாக்கு சுட்டு விட்டால் செல்வ செழிப்பு குறைய ஆரம்பிக்கும், மிகவும் சூடாக எதையும் பருகக்கூடாது என்றார்கள் நம் முன்னோர்கள்.

டீ, காபி, பால் போன்ற சூடான பானங்களை மிதமான சூட்டோடு நுனி நாக்கில் படாமல் குடிப்பது நலம் பயக்கும்.

இதை முழுவதுமாக கடைப்பிடிக்கும் விதமாக நமது முன்னோர்கள் வாய் உதடு படாமலும், பல் படாமலும் அண்ணாந்து பானகங்களை குடித் தார்கள்.

இன்றும் ஒருசிலர், தங்கள் சொந்த வீடாக இருந்தாலும், எதையும் தூக்கிக் குடிக்கும் பழக்கத்தை கடைபிடிப்பார்கள்.

இது ஆச்சாரத்திற்கு எனஅனைவரும் கருது கின்றனர், விஷயம் அறிந்தவருக்கு இதன் ரகசியம் தெரியும்.

நுனி பல்லும், நுனி நாக்கும் சூடு பட்டால் அதன் சுயதன்மையை இழந்து துடிக்கும், பின்பு அந்த பாகத்திற்குரிய தேவதை பாதிக்கப்பட்டு சாபம் பெறுவோம். எனவே சூடான உணவுகளை நுனி நாக்கிற்கு பாதிப்பு வராதபடி மிதமான சூடாகும்வரை ஆற வைத்தே சாப்பிட வேண்டும்.

அதுபோல் காய். கிழங்கு. பழம் வகைகள் வெட்டினாலும் முதலில் அடி பகுதியை வெட்டிய பின்னரே மற்ற பகுதியை நறுக்க வேண்டும்.

(அடிபகுதி எதிலும் சக்தி பகுதியாகும், அங்கு பலி நிகழ்த்தும் போது (அறுத்தல்) பாதகமில்லை, முனை பகுதியே வளர்ந்து வரும் பகுதி அதன் முனையை கிள்ளினால் வளர்ச்சி தடைபடுவது ஒருபுறம் இருந்தாலும், அதை கிள்ளிய நம்மு டைய வாழ்க்கையும் தடைபடும் என்றனர் முன் னோர்கள்.

வாழை பழம் கைகளால் பிரித்து சாப்பிட்டாலும் அதன் தோல் உறிக்கும் போது முதலில் அடி பகுதியான காம்பு பகுதியையே முதலில் உறிக்க வேண்டும்.

மனிதர்களின் நுனி பகுதி நம் தலை,



அந்த தலையிலும் லட்சுமி வாசம் செய்வதால் தான் தலையில் யாரும் கொட்டக்கூடாது என்பார்கள்.

முடிந்தளவு மனித நிழலில் தலை பாகத்தையும் மிதிக்க வேண்டாம், இச்செயலை செய் பவருக்கு வறுமை ஏற்படும். சுபிட்சமாக வாழ லட்சுமி ஸ்தானத்தை அவமதிக்க கூடாது என்பதை நமது முன் னோர்கள் கவனத்துடன் கடைபிடித்தார்கள்.

இதைப்போன்று பேன் பார்க் கும் போது அதை தலையிலேயே வைத்து குத்தக்கூடாது (சிரசு லட்சுமிக்குரியதால் அது புனிதமான பகுதி அதனால்தான் கங்கை. சூர்யன். சிவஸ்தானம் என்றனலாம் வர்ணிப்பார்கள்)

பேனை சிரசில் இருந்து நீக்கி பின்பு வெளியில் வைத்து குத்துவார்கள், தலையில் சீப்புபடுவதால் சீப்பில் பேன் குத்த கூடாது.

பாவங்கள் நம்மை அடையவும், பாவம் நீங்க வும் பிரதான வழியாக இருப்பது தலைதான், சிரசின் வழியாகத்தான் பாவம் மனிதர்களை தாக்கும், அதே சமயம், பாவம் போவதும் சிரசின் வழியாகத்தான்.

கோவிலுக்கு செல்லும்போது தெய்வ சக்தி மனிதனுக்கு கடாட்சம் ஆவதும் சிரசின் வழி யாகத்தான், தெய்வங்களால் பயன்படுத்தக்கூடி யது மனித சிரசு, அதனால்தான் தெய்வ சன்னிதி முன்பு சிரம் தாழ்ந்து வணங்க வேண்டும், சிரசின் வழியாகத்தான் தெய்வ ஆசி கிடைக்கும்.

நன்மை தீமை அனைத்தும் ஒருவரின் சிரசின் வழியாகத்தான் மனித உடலுக்குள் இறங்கும், அதனால் தான், ஏழரை சனியே வந்தாலும் முதலில் சிரசையே பீடிக்கும். பாவம் போக்க கங்கைக்கு போனாலும் தலையுடன் தான் பாவம் தீர குளிக்க வேண்டும், ஆக சிரசு மிக முக்கியம், இது சுத்த லட்சுமி ஸ்தான மாகும்.

சபரிமலைக்கு செல்லும்போது, வேண்டுதல் நெய்யை சிரசில் வைத்துத்தான் கொண்டு செல்கின்றனர், உடலின் மற்ற பாகங்களைக் காட்டிலும் சிரசின் வழியை தெய்வங்கள் நம்மை எளிதாக ஆட்கொள்ளும்.

தலையை அடிக்கடி சொறிவது.

தலையில் கை வைத்து உறங்குவது.

தலையில் கைவைத்து உட்காருவது போன்ற துர் செயல்களை தவிர்த்தாலே வீணான குழப்பங்கள், கவலைகள், துக்கம் போன்றவை நம்மை அண்டாது.

# தீபாராதனை

பதினாறு வகை உபசாரங்களில் ஒன்று தீபாராதனை. பூசைக் காலத்தில் பலவித தீபங்கள் காட்டப்பெறுகின்றன. தீபாராதனைக் காலத்தில் தெய்வங்கள் பலவும் தீபங்களில் வந்து அமர்ந்து இறைவனைத் தரிசித்துச் செல்வார்கள் என்பது மரபு. பல அடுக்குகளைக் கொண்ட நட்சத்திர தீபம் முதல் பல தீபங்கள் காட்டப் பெறுகின்றன.

நட்சத்திரங்கள் இறைவனை வழிபட்டு ஒளி பெறுகின்றன என்ற கருத்தில் நட்சத்திர தீபம் காட்டப் பெறுகின்றது.

ஒன்பது தீபங்கள் நவசக்திகளைக் குறிக்கும்.

ஏழு தீபங்கள் சப்தமாதர்களைக் குறிக்கும்.

ஐந்து தீபம் – நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தி அதீதகலை என்ற ஐந்து கலைகளைக் குறிக்கும்.

மூன்று தீபம் சந்திரன், சூரியன், அக்னி என்ற மூன்று ஒளிகளைக் குறிக்கும்.

ஒற்றைத் தீபம் சரசுவதியையும், சுவாகாதேவியையும் சுட்டும்.

ஐந்து தட்டுக்களில் தீபம் ஏற்றி நான்கு திசைகளில் நான்கு, நடுவில் ஒன்று என்ற முறையில் அமைத்த அமைப்புக்கு ஒற்றை விளக்குக் காட்டிப் பின் நடுத்தட்டு முதலாக ஐந்து தட்டுகளையும் தீபத்துடன் காட்டப் பெறும்.

ஐந்தும் இறைவனுடைய ஐந்து முகங்களைக் குறிக்கும். மந்திரங்களுள் பஞ்சப்பிரம மந்திரங்கள் சிறப்புடையன.

1.ஈசானம் 2.தத்புருடம் 3.அகோரம் 4.வாமதேவம் 5. சத்யோசாதம் என்ற ஐந்தும் பஞ்சப்பிரம மந்திரங்கள் எனப்படும்.

ஏனைய மந்திரங்களுக்கு முன்னே தோன்றியதாலும், ஏனைய மந்திரங்களுக்குக் காரணமாக இருப்பதாலும் பஞ்சப் பிரம மந்திரங்கள் சிறந்தன என்று சிவஞானசித்தியார் குறிப்பிடுகின்றது.

அந்தந்த மந்திரங்களால் அந்தந்த முகத்தைத் தரிசிப்பது என்ற முறையில் ஐந்து தட்டுத் தீபங்கள் காண்பிக்கப்படுகின்றன. இறுதியாக கும்ப தீபம் காண்பிக்கப் பெறும்.

கும்ப தீபம் சதாசிவ தத்துவத்தை குறிக்கும். அனைத்தும் சதாசிவத்துள் ஒடுங்கும் என்ற முறையில் அமைந்தத்து. விரிவாகப் பலவாறாக இருக்கும் தீபங்கள் முதல் கும்ப தீபம் இறுதியாகக் புருட தீபம், மிருக தீபம், பட்ச தீபம், வார தீபம், ருத்ர தீபம் முதலிய தீபங்களும் விரிவாகக் காட்டும்போது காட்டப் பெறுவதுண்டு.

அந்தந்தத் தீபத்திற்குரியவர்கள் அந்தந்த உருவில் வந்து இறைவனை வழிபடுகிறார்கள் என்பது கருத்து.

தீபாராதனை செய்யும்போது மூன்று முறை காட்டவேண்டும். முதன் முறை காட்டுவது உலக நலங்கருதியது.

இரண்டாம் முறை கோவில் உள்ள ஊர்மக்கள் நலங்கருதியது.

மூன்றாம் முறை ஐம்பெரும் பூதங்களால் இடையூரின்றி நலம் பயக்க வேண்டும் என்பது கருதியது. காட்டும்போது இடப்பக்கத் திருவடியில் தொடங்கி இடை, மார்பு, கழுத்து, நெற்றி, உச்சி என்ற முறையில் உயர்த்தி வட்டமாக வலப்பக்கம் தோள், மார்பு, இடை, பாதம் என்ற அளவில் 'ஓம்' என்னும் பிரணவ வடிவில் காட்ட வேண்டும்.

மூர்த்தி பேதங்களுக்குக்கேற்பத் தீபாராதனை முறையில் வேறுபாடு உண்டு. தீபாராதனைக்குப்பின் கற்பூரம் காட்ட வேண்டும்.

தூய கற்பூரம் எரிந்தபின் எஞ்சியிருப்பது ஒன்றும் இல்லை. அதுபோல ஆன்மாபாச ஞானம், பசு ஞானம் நீங்கி இறைவனின் திருவடியில் இரண்டறக் கலந்து இன்பம் துய்த்தல் வேண்டும்.





# உத்தரவு தரும் பச்சைவாழியம்மன்

தமிழ்நாட்டில் கிராமபுறங்களில் அம்மனை காவல் தெய்வமாக வழிபடுவது பரவலாக காணப்படும் ஒரு வழக்கமாகும். அனைத்து செயல்களுமே தெய்வத்தின் அருள்படி தான் நடக்கிறது என்பது அனைவருமே அறிந் திருந்தாலும் தங்களின் வீட்டில் நடக்கும் விசே ஷங்களுக்கு தெய்வத்திடம் மக்கள் அனுமதி கேட்கும் ஒரு கோயிலாக எழுமேடு அருள்மிகு பச்சைவாழியம்மன் திருக்கோயில் இருக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் எழுமேடு என்கிற ஊரில் அருள்மிகு பச்சைவாழியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது.

சுமார் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோயிலாக இந்த பச்சைவாழி அம்மன் கோயில் இருக்கிறது இக்கோயிலின் பிரதான தெய்வமான அம்மன் பச்சைவாழியம்மன் என்கிற பெயரில் அழைக்கப்படுகிறாா்.

தல புராணங்களின்படி பச்சைபசேல் என வயல் வெளிகள் சூழ்ந்திருந்த இந்த ஊரையும், அதில் வசித்த மக்களையும் காப்பதற்கு அம்மன் ஒரு பச்சை பச்சை மரத்தில் குடி அமர்ந்தாள். இந்த தகவலை ஊர் பெரியவர் ஒருவர் கனவில் வந்து அம்மன் உரைக்க, விடிந்ததும் அப்பெரியவர் ஊர் மக்களிடம் இந்த கனவை பற்றி கூறிய போது அனைவரும் மெய்சிலிர்த்தனர்.

பிறகு ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து பச்சைவாழி அம்மனுக்கு இங்கு கோயில் எழுப்பி வழிபடத் தொடங்கினர்.

அருள்மிகு பச்சைவாழியம்மன் கோயில் சிறப்புகள்: பழமையான இக்கோயில் பிரகாரத்தில் கருப்பண்ணசாமி சந்நிதி, கொடிமரம் மற்றும் குதிரை வாகனம் இருக்கின்றன. கடலூர், பண்ருட்டி, எழுமேடு ஆகிய ஊர்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் வீடுகளில் நடக்கும் சுப காரியத்திற்கு முன்பாக இக்கோயிலுக்கு வந்து அம்மனிடம் உத்தரவைக் கேட்டு அக்காரியத்தை மேற்கொள்கின்றனர்.

அம்மன் விக்கிரத்தின் தோளின் மீது எலுமிச்சைப் பழத்தை வைத்து, செய்யப்போகும் காரியம் குறித்து மனதில் வேண்டிக்கொள்வார்கள். பழம் கீழே விழுந்தால் அக்காரியம் வெற்றி பெரும் என்பது பக்தர்களின் திடமான நம்பிக்கையாகும்.

பச்சைவாழியம்மன் காவல் தெய்வமாக இருப்பதால் அம்மனுக்கு பூஜை செய்யும்போது, அந்த தெய்வத்திற்கு மிகவும் பிடித்தமான சிலம்பு மற்றும் உடுக்கையை இசைத்தவாறு பூஜை செய்வது இக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

திருமண பாக்கியம் கிடைக்கவும், பிரிந்து வாழும் தம்பதியர் ஒன்று சேரவும் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள் அம் மனுக்கு பச்சை புடவை சாத்தி தங்களின் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

ஆடி மாதங்களில் வரும் ஆடி வெள்ளி ஆடி அமாவாசை தினங்கள் அம்மனுக்கு விழா கொண்டாடப்படுகிறது.

# எந்தச் சூழலிலும் ஆனந்தம் அவசியம்

புத்தரின் தலைமை மடாலயத்தில் நிகழ்ந்த சுவையான சம்பவம்.

அடிப்படை சந்நியாஸப் பயிற்சியை வெற்றி கரமாக முடித்த சந்நியாஸிகள், தியானத்தை மக்களுக்குக் கற்றுத்தந்து, மக்கள் முன்னேற்றம் பெறுவதற்காக நாடு முழுவதும் சேவைக்காக புறப் படும் நேரம் வந்தது.



அதில் பூர்ணகாஷ்யபா எனும் சந்நியா ஸிக்கு மட்டும் எங்கு செல்வது என்று சொல்லப்படவில்லை.

பூர்ணகாஷ்யபா நேரடி யாய் புத்தரிடமே சென்று கேட்டார், “நான் எங்கு செல்லட்டும்?”

புத்தர் சிரித்தபடி சொன்னார், “நீயே தேர்வு செய்யப்பா.”

இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு தான் செல்ல விரும்புவதாக சொன்னார்.

சீடனைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டவராய் புத்தர் கேட்டார், “அந்தப் பகுதிக்கா? அங்கே வாழும் மனிதர்கள் மிகவும் முரடர்கள். சின்ன சின்ன பிரச்னைக்கெல்லாம் அடிதடி சண்டையில் இறங்குபவர்கள், கொஞ்சம் கூட பக்தியோ, தியான உணர்வோ இல்லாதவர்கள். இப்படி பொல்லாதவர்களிடமா போக விரும்புகிறாய்?”

“ஆமாம்” என்று தைரியத்தோடு சொன்னசீடனி டம் புத்தர் சொன்னார்ஞ்“உன்னிடம் மூன்று கேள்விகளை கேட்க விரும்புகின்றேன். இந்த மூன்று கேள்விக்கும் சரியான பதில் சொல்லி விட்டால் நீ போகலாம்.”

“ம்... சரி...”

“முதல் கேள்வி, அங்கே சென்ற பிறகு உன்னை வரவேற்பதற்கு பதில் அவமானப்படுத்தினால் என்ன செய்வாய்?”

“ரொம்ப ஆனந்தப்படுவேன். ஏனென்றால், அவர்கள் என்னை அடிக்கவில்லை; உதைக்க வில்லை.

திட்டுவதோடு நிறுத்திக் கொண்டார்களே; மிகவும் நல்லவர்கள் என்று நன்றி சொல்வேன்.”

“இரண்டாவது கேள்வி. ஒருவேளை திட்டாமல் அடித்து உதைத்தால் என்ன செய்வாய்?”

“அவர்கள் மிகவும் நல்லவர்கள். அதனால்தான் என்னைக் கொல்லாமல் விட்டுவிட்டார்கள். வெறு மனே அடித்ததோடு நிறுத்திக் கொண்டார்களே! என ஆனந்தப்படுவேன்.”

“மூன்றாவது கேள்வி. ஒருவேளை உன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வாய்?”

“ஆஹா இன்னும் ஆனந்தப்படுவேன். மொத்த மாக இந்த வாழ்க்கையில் இருந்தே எனக்கு சுதந்திரம் தந்துவிட்டார்கள். இனி எதைப் பற்றி யும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை என்று மிகவும் ஆனந்தப்படுவேன்” என்று சொன் னதும்,

“நன்றாக தேறிவிட்டாய். அங்கு மட்டுமல்ல எங்கு சென்றாலும் நீ வாழ்ந்து விடுவாய். எதனாலும் இனி உன்னை வீழ்த்தமுடியாது. எப்போதும் ஆனந்தமாயிருக்க பக்குவப்பட்டுவிட்டாய். எங்கு சென்றாலும் நல்லாயிருப்பாயப்பா. போய் வா” என்று ஆசிர்வதித்து அனுப்பினார் புத்தர்.

எந்தச் சூழலையும் ஆனந்தமாக அணுகக் கற்றுக் கொண்டால், எந்த சூழலையும் ஆனந்த மயமாக்கிட முடியும். இல்லாவிட்டால் ஆனந்தமயமான சூழல்கள் வாய்த்தால்கூட, அதிலும் ஏதாவது துக்கம் இருந்து கொண்டே இருக்கும்.



# கலியுக யசோதை

## சிறந்த கிருஷ்ண பக்தை

இந்தப் படத்தில் மஞ்சள் நிற புடவையில் இருக்கும் பெண்மணியின் பெயர் யசோதா.

இளம் வயதாக இருக்குபோதே தனது கணவனை இழந்து வாழ்க்கையில் அதற்கு மேல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தவர்.

கிருஷ்ணன் மீது மிகுந்த பக்தி கொண்ட இவர் விருந்தாவனில் உள்ள பங்கே பிஹாரி கோவிலின் வாசலில் அமர்ந்து கோவிலுக்கு வரும் பக்தர்களின் செருப்புக்களை பாதுகாக்கும் வேலையை பார்த்துக் கொண்டார்.

பக்தர்களாக விரும்பித் தரும் பணத்தை மட்டுமே அவர் பெற்றுக் கொள்வார். தனக்கு என்று குடும்பம் என்று எதுவும் இல்லாததால் அவருக்கு பெரிய செலவுகள் ஏதும் கிடையாது என்பதால் கிடைத்த பணத்தை மட்டும் சேமித்து வைத்துள்ளார்.

கடந்த 40 வருடங்களாக அவரிடம் சேர்ந்த தொகை எவ்வளவு தெரியுமா? கேட்டால் மலைத்துப் போய்விடுவீர்கள். ரூ.51,02,050/ ஐம்பத்தொரு லட்சம் ரூபாய்கள்.

அவர் அந்த பணத்தை தனக்கென பயன்படுத்தாமல், அதில் இருந்து நாற்பது லட்சம் ரூபாய் செலவில் ஒரு கோசாலையையும், கோவிலுக்கு வரும் யாத்ரிகள் தங்குவதற்காக வேண்டி ஒரு தர்ம சாலையையும் அமைத்துக் கொடுத்துள்ளார்.

இந்த அளவுக்கு ஒரு பெரிய வேலையை செய்துவிட்டு அதைப்பற்றி அவர் பெரிதாக வெளிக்காட்டிக் கொள்ளாமல் பக்தர்களுக்கும், பசுக்களுக்கும் சேவையை தொடர்ந்து வருகிறார்.

பணமே வாழ்க்கையில் எல்லாம் என்று இருப்பவர்களுக்கு இந்த பெண்மணி செய்திருக்கும் அருஞ்செயல் மிகப் பெரிய பாடமாக இருக்கும்.

ஸ்ரீமத் பாகவதத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் "அஹம் பக்தப் பராதீனஹ" என்று கூறுவதாக வருகிறது. என் பக்தர்கள்தான் எனக்கு எல்லாமே. நான் என் பக்தர்களை நம்பி இருக்கிறேன் என்பதாக பொருள் கொள்ளலாம்.

பகவான் கிருஷ்ணரின் தாய் பெயரும் யசோ தா, தனது மகனான கிருஷ்ணனை ஒரு குழந்தையாக மட்டுமே பார்த்து கண்ணும் கருத்துமாக அன்பு பாராட்டுவாளாம் அந்த தாய் யசோதா. அவள் கண்ணுக்கு தெரிந்தது பகவான் கிருஷ்ணர் அல்ல, குழந்தை கிருஷ்ணர் மட்டுமே.

இதே பக்தி மேற்கண்ட படத்தில் உள்ள யசோதாவுக்கும் உள்ளதால், தான் சம்பாதித்த தொகை அவருக்கு பெரிதாக தெரியவில்லை, அதுபோல பகவானுக்கு தன்னால் கட்டப்பட்ட கட்டிடமும் பெரிதாக அவருக்கு தோன்றவில்லை.

தற்காலத்தில் கோவிலுக்கு ஒரு டியூப் லைட் வாங்கி கொடுத்து அதில் பாதி அளவிற்கு உபயதாரர் என்று பெயரை பொறித்து, வெளிச்சத்தில் பாதியை மறைக்கும் அளவிற்கு விளம்பரம் தேடுபவர்கள் மத்தியில், தன் வருமானத்தை கிருஷ்ணருக்கே அர்ப்பணித்து, மீண்டும் காலனிகளைப் பாதுகாக்கு சேவையில் ஈடுபட்டவரை சுற்றும் முற்றும் உள்ளவர்கள் ஒரு மகானாகவே பார்த்து செல்கின்றனர்.

# சாப்பாட்டுராமன்

சாப்பாட்டில் அதிகம் விருப்பம் உள்ளவர்களை "சாப்பாட்டுராமா!" என கேலி செய்வதுண்டு.

ஆனால் ராமபிரான் அதிகப்படியான உணவை உண்ணாத போதும் அவருக்கு சாப்பாட்டு ராமன் என்ற பெயர் வர காரணம் என்னவாக இருக்கும்.

அதைப் பற்றி பார்ப்போம்.

இலங்கையில் போர் முடிந்து ராவணனை வதம் செய்தபின் ஸ்ரீ ராமர் சீதை லஷ்மணர் சுக்ரீவர் விபீஷணர் மற்றும் வானரப்படைகளுடன் அயோத்திக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில், அயோத்திக்கு செல்லு முன்பாக பரதவாஜ முனிவரை தரிசிக்க விரும்பினார்.

ஆனால் அயோத்திக்குச் செல்ல நேரம் தாமதமானால் பரதன் தீமூட்டி அதில் தான் விழுந்துவிடுவதாய் சொன்னதை நினைத்துப் பார்த்தார். 14 ஆண்டுகள் முடிந்த உடனேயே அண்ணன் வராவிடில் தான் தீயில் விழுந்து மாண்டு விடுவதாக முன்னமே பரதன் சொல்லி இருந்தான்.

பரதன் சொன்னதை செய்யக்கூடியவன் என ராமர் அறிவார்.

ஆனாலும் பரத்வாஜமுனிவரை தரிசிக்காமல் செல்ல மனமுமில்லை. முனிவரை விரைந்து சென்று தரிசித்து பின் அயோத்தி செல்ல முடிவு செய்தார். பரத்வாஜ முனிவர் ஸ்ரீ ராமர் சீதா பிராட்டியையும் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தார்.

"இரவாணனை வெற்றி கொண்ட ஸ்ரீராமா! என் ஆஸ்ரமத்திற்கு நீ வந்ததில் மிக்க மகிழ்ச்சி. இன்று இரவு இங்கே தங்கிவிட்டு நாளை இங்கு நடக்கும் ததீயாராதனையில் கலந்துகொண்டு (திருமாலடியார்க்கு வழங்கிடும் விருந்துணவு) உணவு உண்டு செல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

முனிவரின் வேண்டுகோளை ராமரால் நிராகரிக்க முடியவில்லை. ஆனால் அதே நேரம் தன் வருகை தாமதமானால் தம்பி உயிர் துறப்பான் என்றும் அஞ்சினார். ஆகவே அனுமனை அழைத்தார்.

"அஞ்சனைகுமாரனே! என் அருமை பக்தனே! எனக்காக நீ பரதனிடம் சென்று நான் எல்லோருடனும் வந்துகொண்டிருப்பதை சொல்லி விட்டுவா. வாயு புத்திரனான நீ இதை காற்றாய் ஓடிச்சென்று முடித்து உடன் இங்குவரவேண்டும்". அனுமன் அண்ணல் சொன்ன சொல்லை நிறைவேற்ற இறைப்பொழுதில் அங்கிருந்து அகன்றான்.

மறுநாள்...

விருந்திற்காக இலையினைப்போட்டார்முனிவர். அனைவரும் அமர்ந்துவிட்டனர். அனுமன் பரதனை சந்தித்துவிட்டு வந்துவிட்டான் அனுமன் விருந்துக்குவருவாரென முனிவர் நினைக்கவில்லை. அனுமனுக்கு இலை எதுவும் காலி இல்லை.

ராமன் அனுமனை தன் இலைக்குஎதிர்ப்புறம் அமரச்சொல்கிறார். அனுமன் காய் பழங்களைத் தான் உண்பார் என ராமருக்குத்தெரியும் ஆகவே இலையின் மேல்பக்கத்தில் காய் பழங்களை பரிமாரச் சொல்கிறார்.



சாதம் மற்ற உணவு வகைகளைத் தன் பக்கம் போட சொல்கிறார். இருவரும் ஒரே இலையில் சாப்பிட்டு முடிக்கின்றனர். சாப்பாட்டிற்காக முனிவர் கேட்டுக்கொண்டார் என்று தன் பயணத்தின் இடையே தங்கி சாப்பாட்டினை முடித்துக் கொண்டதால் ராமர் சாப்பாட்டு ராமன் ஆகிறார். காலபோக்கில் சாப்பாட்டில் விருப்பம் உடையவர்களை இப்படிப் பெயரிட்டு அழைப்பது வழக்கமாகிவிட்டது.





## கற்சிலை அல்ல பூத உடல்

# 1000 ஆண்டுகளாக ஸ்ரீரங்கத்தில் பாதுகாக்கப்படும் ராமானுஜரின் திருமேனி

ஸ்ரீரங்கம் கோவிலில் உள்ள ஸ்ரீராமானுஜர் பூத உடல் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக இருக்கிறது.

இராமானுஜரின் பூதவுடல் கெடாமல் பாதுகாக்கப்பட்டு, இன்றளவும் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்த பூத உடலுக்கு வருடத்திற்கு இரண்டு முறை மட்டும் பச்சைக் கற்பூரமும், குங்குமப்பூவும் கொண்டு அபிஷேகம் செய்து வருகிறார்கள். அமர்ந்த நிலையில் சற்றே பெரிய திருமேனியாக இராமானுஜரை இன்றும் நாம் ஸ்ரீரங்கத்தில் உடையவர் சந்நிதியில் தரிசிக்கலாம் (உடையவர் என்பது இராமானுஜரின் சிறப்புப் பெயர்).

இந்த அதிசய செய்தியை இந்துக்களிலேயே பலரும் அறிந்திருக்கவில்லை.

ஸ்ரீராமனுஜர் சன்னதி ஸ்ரீரங்கம் கோவிலில் இருப்பதே பலருக்கும் தெரிந்திருக்கவாய்ப்பில்லை.

அப்படியே ஸ்ரீராமனுஜர் சந்நதியை பார்ப்பவர்கள் ஸ்ரீராமானுஜரின் பூத உடல் என்று அறிவது இல்லை, சந்நதியில் உள்ளது கருங்கல் சிலை என்றே பலர் நினைத்து கடந்துப் போகிறார்கள்.

தானான திருமேனி (இராமனுசர் பூதஉடல்) இராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் பரமபதம் அடைந்தவுடன், அரங்கனுடைய வசந்த மண்டபத்திலேயே அவருடைய திருமேனியை (பூத உடலை) பிரதிஷ்டை செய்தார்கள்.

இராமானுஜர் தமது 120ஆவது வயதில் (கி.பி. 1137), தாம் பிறந்த அதே பிங்கள வருடம் மாசி மாதம் வளர்பிறை தசமி திதியில், சனிக்கிழமை நண்பகலில், ஜீயர் மடத்தில் பகவத் சாயுஜ்யம் அடைந்தார்.

அவருடைய சீடர்களான கந்தாடையாண்டான், அருளாளப்பெருமாள் எம்பெருமானார், வடுகநம்பி முதலானோர் வேரறுந்த மரம் போல் விழுந்து கிடந்து துடித்தனர்.

அவரது உயிர் பிரிந்த உடனே:

தர்மோ நஷ்ட (தர்மத்திற்கே பெருத்த நஷ்டம்) என்று அசரீரி ஒலித்ததாம். அப்போது நடந்த நிகழ்வுகள் எல்லாம் அதிசயத்திலும் அதிசயமானது ! என்பர்.

நம்பெருமாள் என்னும் அரங்கன் தான் உடுத்திக் களைந்த ஆடையையும், சூடிக்களைந்த துழாய் மலரினையும், எண்ணெய்க் கிண்ணத்தையும் தம்

இறுதி மரியாதையாக ஒரு பொற்கிண்ணத்தில் இட்டு உத்தம நம்பி என்ற சீடர் மூலம் ஜீயர் மடத்திற்கு அனுப்பினாராம்.

உத்தம நம்பிகள் ஜீயர் மடத்தில் இருந்த சீடர்களுக்கு ஆறுதல் சொல்லி, அதன் பிறகு எண்ணெயை இராமானுசரின் திருமுடியில் தேய்த்துப் பின் அவர் திருவுடலை நீராட்டி, அரங்கன் உடுத்திக் களைந்த ஆடையையும் சூடிக்களைந்தத் தொடுத்த துழாய் மலரினையும் திருமேனியில் சாற்றினாராம்.

பின்பு எண்ணெய் மற்றும் ஸ்ரீ சூர்ணங்களும் பிரசாதமாக அங்கிருந்தோருக்கு வழங்கப்பட்டதாம். இதை வைணவ மொழியில் "பிரம்மமேத ஸம்ஸ்காரம்" என்கிறார்கள்.

இதன் பின்பு இராமானுஜரின் திருமேனி ஒரு வாகனத்தில் (திவ்ய விமானத்தில்) அமர்த்தப்பட்டு, இதன் முன்னின்று அவருடைய முக்கிய சீடர்களும், ஜீயர்களும் பரஹ்மவல்லி, ப்ருகுவல்லி, நாராயணானுவாகம் போன்ற மந்திரங்களை ஓதினராம்.

பல்லாயிரக்கணக்கான சீடர்கள், பணியாளர்கள் மற்றும் பக்தர்கள் புடை சூழஇராமா னுஜர் திருமேனி தாங்கிய வாகனம் இறுதிப் பயண ஊர்வலத்தைத் தொடங்கியது.

திருவரங்கப் பெருமாளரையர் தலைமை தாங்கி திருவாய்மொழியரையர், ஆப்பான், திருவழுந்தூரரையர், திருநறையூரரையர், அழகிய மணவாரரையர் முதலிய எழுநூறு திருவாய்மொழி ஓதும் அரையர்கள் திருவாய்மொழியினை ஓதியபடி பின் தொடர்ந்தனர்.

தொடர்ந்து 'இராமானுஜர் நூற்றந்தாதி" ஓதியபடி ஸ்ரீரங்கத்து அமுதனார், பெரியகோவில்வள்ளலார் முதலியவர்கள் வாகனத்தின் பின் வந்தனர்.

ஸ்ரீரங்கத்தில் ஜீயர் மடத்திலிருந்து நகரின் நான்கு உத்திர வீதி, சித்திரை வீதிகளிலும் வாகனம் ஊர்ந்தது. மக்கள் கூட்டம் வீதியெங்கும் நிரம்பி வழிந்தது. பெண்கள் தங்கள் வீதிகளில் நீர் தெளித்துக் கோலமிட்டுக் கூடி நின்றனர்.

மக்கள் பூவும் பொரியும் கலந்து தூவினார்களாம். அரங்கன் கோவில் திருநடை மூடி, கரும்பும் குடமும் ஏந்தினராம். அடியார்கள் சாமரம் வீச, வானில் கருடன் வட்டமிட இராமானுஜர் இறுதி ஊர்வலம் திரும்ப கோவில் வாயிலை அடைந்தபோது தரிஸனத்தில் எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுந்தருளினார்! என்று அசரீரி மீண்டும் ஒலித்ததாம்.

தொடர்ந்து அரங்கன்

"இராமானுஜன் என்தன் மாநிதி

என்றும்

இராமனுஜன் என்தன் சேமவைப்பு"

என்றும் திருவாய் மலர்ந்தருளினாராம்! அரங்கன்.

அதாவது இராமானுஜர், எனது மிகப் பெரும் செல்வம்; எனது சேமநிதி! என அரங்கன் திருவாய் மலர்ந்தருளினார்.

நமது பணத்தை. நாம் வங்கியில் நிரந்தர சேமிப்பு வைப்பு நிதியாகப் பாதுகாப்பதைப் போல; அரங்கன், இராமரின் தம்பி இலட்சுமணரின் அவதாரமான இராமனுஜரை என்றென்றும் பாதுகாத்து வைத்திட அருள் செய்தார்.

அப்படியானால் பிற சிரஞ்ஜீவிகளைப்போல இவரையும் ஏன் என்றென்றும் உயி



ரோடிருக்கச் செய்ய வில்லை?

என்றால், கலியுகம் அந்தப் பாக்கியத்தைப் பெறவில்லை! எனலாம். உயிர் பிரிந்து பூதவுடலானாலும் திருமேனி எப்போழுதும் அடையாதிருப்பதே இறைபக்தி மற்றும் இறை நம்பிக்கையற்றவர்கள் இதைக் கண்ணாரக் கண்டு, அறிவு பெற்றிட வேண்டும்! என்பது திருமாலின் திருவுள்ளமாக இருக்கலாம்.

எனவே இராமனுஜரின் பூத உடல் என்ற அந்த நிதி வெளியே எங்கும் போகலாகாது என்று அரங்கன் தன் திருக்கோவில் வளாகத்திலேயே (ஆவரணத்துக்குள்ளேயே) எவ்வாறு ஒரு அரசன் தன் பெண்டிரை தன் அந்தபுரத்திலே அடக்கி வைப்பானோ அதுபோல தன்னுடைய சந்நதிக் குள்ளேயே, (யதிஸம்ஸ்காரவிதியின் படி), பள்ளிப் படுத்தினர்! பெரியோர்கள்.

பல வருடங்களுக்கு முன் வைணவ மரபில், துறவிகளை எரிக்கும் வழக்கம் கிடையாது. மாறாக அவர்களை திருப்பள்ளிப் படுத்துவார்கள் (புதைத்தல்).

இராமானுசரின் பூதவுடலை ஸ்ரீரங்கம் கோவில் வளாகத்தில் (முன்னாள் வசந்த மண்டபம் என்றழைக்கப்பட்ட இடத்தில்) திருப்பள்ளிப்படுத்தி அதன் மேல் எழுப்பப்பட்டது தான் தற்போதைய உடையவர் சன்னிதி.

இன்றும் நாம் இவருடைய பூத உடலை தரிசிக்கலாம் இவரின் திருமேனியில் தலைமுடி கைநகம் போன்றவற்றைக் கூட எளிதாகக் காண இயலும். ஸ்ரீரங்கத்தில் இராமானுஜரின் சந்நதியில் எழுந்தருளியுள்ள திருமேனிக்கு தானான திரு மேனி என்று பெயர்.

ஆதிசேஷனின் அவதாரமல்லவோ இராமா னுஜர்! இலட்சுமணரின் மறுபிறவி அல்லவோ இராமனுஜர், (இராம + அனுஜர் அனுஜ = தம்பி) அவரது திருமேனி. இன்றும் நிலைத்திருக்கத் தானே செய்யும்?

# பெரிய பெரிய பெருமாள்



பெரிய பெருமாள் என்று ரங்கநாதரைச் சொல்வோம். ஆனால், பெரிய பெரிய பெருமாள் தெரியுமா?

ஒருமுறை திருப்பதி சீனிவாசர் கல் யாணத்தில், விருந்துக்காக மலை போல், சாப்பாடு தயாரிக்கப் பட்டு இருந்தது.

இந்திரன் உள்ளிட்ட தேவர்கள், மகரி ஷிகள் சாப்பிடுவதற்காகக் காத்திருந் தனர்.

மணக்கோலத்தில் இருந்த சீனிவாச னிடம் இந்த பதார்த்தங்களை முதலில் யாருக்கு நிவேதனம் செய்வது எனத் தெரியவில்லையே! என்று பிரம்மா கேட் டார்.

அதற்கு சீனிவாசர், அகோபிலம் நரசிம்மருக்கு முறைப்படி முதலில் படைத்த பின், சாப்பாட்டை அனைவருக்கும் பரி மாறுங்கள் என்றார்.

உடனே அவரும், பத்மாவதி தாயா ருடன் சென்று, அகோபிலம் நரசிம்மரை வழிபடவும் செய்தார்.

பிரம்மாண்ட புராணத்தில் வேங் கடாசல மகாத்மியத்தில் இச்செய்தி இடம் பெற்றுள்ளது.

பெருமாளே வழிபட்டதால், அகோபிலம் நரசிம்மருக்கு பெரிய பெரிய பெருமாள் என்ற சிறப்பு பெயர் உண்டானது.

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
155 க்கும்
மேற்பட்ட
இதழ்களை



aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.



# அகத்தியரின் கர்ம காண்டமும் ஏழு பிறவிகளின் விளக்கமும்?

மாமுனிவர் அகத்தியர் பெருமான் கர்ம காண்டம் நூலில் கூறியது...

மனிதனின் ஏழு பிறவிகள் பற்றி விரிவாக கூறியுள்ளார்.

1. கடவுள் மனிதனாகப் பிறப்பது
2. மனிதன் மனிதனாகப் பிறப்பது
3. மிருகம் மனிதனாகப் பிறப்பது
4. பறவைகள் மனிதனாகப் பிறப்பது
5. நீர் வாழ்வன மனிதனாக பிறப்பது
6. பூச்சிபுளு மனிதனாகப் பிறப்பது
7. மரம்செடிகள் மனிதனாகப் பிறப்பது

இப்படியாக மனிதப்பிறவிகள் ஏழுவகையாக பிரிக்கப்பட்டு அப்பிறவிகளில் செய்யக்கூடிய பாவ பபுண்ணியங்களுக்கு ஏற்ப மாறிமாறி பிறந்தும் இறந்தும் வாழ்கின்றோம்... என்று விவ ரிக்கப்பட்டுள்ளது.

## 1. கடவுள் மனிதனாகப் பிறந்தால்

நீதிகளையும் தர்மங்களையும் போதித்து, ஆலயங்களை எழுப்பி, அங்கே தானதர்மங்கள் செய்வர். பல்லுயிர்களும் நலம் வாழ தவம் தியானம் யாகம் பலசெய்வார்.

## 2. மனிதன் மனிதனாகப் பிறந்தவர்

நீதி நியாயமாய் வாழ்வார். தான தர்மங்களை செய்வார். மரங்களை நடுவார். மிருகம் பறவை களுக்கு பசியினை போக்க வழிவகை செய்வர்.

## 3. மிருகம் மனிதனாகப் பிறப்பது

எந்தநேரமும் உழைப்பான். ஆனால், அதனை சரிவர பயன்படுத்தாமல் வீன் செய்து விடுவார். நீதி நியாயம் எதையும் பார்க்காமல் எவர் பொருளையும் எடுப்பார்கள். மற்றவரை துன்புறுத்துவர்.

## 4. பறவைகள் மனிதனாகப் பிறப்பவன்

எப்போது உழைக்காமலே அடுத்தவர் பொருளை பறிக்கவே திட்டமிடுவார். மிருகம் பறவைகளை உயிரென்றும் பாராது அறுத்து உன்பர். நீறி தர்மம் எதையும் செய்யமாட்டார்கள்.

## 5. நீர்வாழ்வன மனிதனாகப் பிறந்தால்

அடுத்தவரை பழித்தல், நயவஞ்சகம் செய்தல், புறம்பேசுதல், இழிவாய் பேசுவது, குற்றச்செயல்கள் செய்வது இதுபோன்றவைகளை செய்வார்கள்.

## 6. புளுபூச்சி மனிதனாகப் பிறந்தால்

வீண்பழி போடுதல், எந்த வார்த்தையும் தவறாகவே வரும் எல்லோரையும் மகான்களையும் ஏன் கடவுளையும் கூட இழிவாகப் பேசுவார், கொலை களவும் செய்வார்கள்.

## 7. மரம் செடி மனிதனாகப் பிறந்தால்

பூமியில் ஜடமாய் பிறந்து வாழும் எந்த வேலை யும் செய்யாது, எதற்க்காக வாழ்வது என்றே அறியாமல், வாழும் பலவகை தவறுகளை செய்தாலும் மறந்துவிட்டு செல்வார் எதை வேண்டு மானாலும் தின்பார்கள். எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு போவார்கள்.

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மிக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# மந்திரமும் மகத்துவங்களும்



மந்திரமும் யந்திரமும் தேவியின் அருள் பெறுவதற்கான முக்கிய சாதனங்களாகும். அவற்றுள் மந்திரம் என்பது ஏழு அங்கங்களைக் கொண்டது.

அவை:

1. ரிஷி 2. சந்தஸ் 3. தேவதை

4. பீஜம் 5. சக்தி 6. கீலகம்

7. அங்க நியாசம் என்பன.

## ரிஷி

மந்திரங்களைக் கண்டுபிடித்து உலகத்திற்கு வழங்கியவர்கள் ரிஷிகள். ஒவ்வொரு மந்திரமும் ரிஷி, தேவதை, சந்தஸ் என்ற மூன்றையும் கொண்டிருக்கும். மந்திரத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்த ரிஷி, அந்த மந்திரத்துக்குரிய தேவதை, அந்த மந்திரத்தின் சொல்லமைப்பு (சந்தஸ்),. எனவே மந்திர ஜெபம் செய்யும் போது, இம் மூன்றையும் போற்றித் துதிக்க வேண்டும் என்பது விதி.

மந்தரத்தை வெளியிட்ட ரிஷி ஆதி குரு, அம்மந்திரத்தை நமக்கு உபதேசித்த மானிட குரு ஆகியவர்களை வணங்குவதற்காக வலது கையால் சிரசைத் தொட்டு உரிய மந்திரம் சொல்ல வேண்டும்.

இதுவே ரிஷி நியாசம்.

நமக்குச் சமமானவரை வணங்கும் போது நமது கூப்பிய கைகளின் விரல்களை அவர்கட்கு எதிரே நீட்டி வணக்கத்தைத் தெரிவிக்கின்றோம். தேவதையை வணங்கும்போது இதயத்தில் வசிப்பவராகப் பாவனையோடு மார்புடன் ஒட்டி நிமிர்ந்த கைகளைக் கூப்பியும் குருவைச் சிரமேல் கைகூப்பியும் வணங்குவது முறை.

## சந்தஸ்

சந்தஸ் என்பது மந்தரத்தின் செ□ல் அமைப்பு. அதற்கு வணக்கம் தெரிவிக்கும் முறையில் உதட்டின் வெளியே வலது கையால் தொடுவது சந்தஸ் நியாசம் எனப்படும்.



## தேவதை

தேவதையை இதயத்தில் அமர்ந்திருப்பதாகப் பாவனையுடன் அதயஸ்தானத்தைத் தொடுவது தேவதா நியாசம்.

## பீஜம்

மிகச் சிறிய ஆலம்விதையிலிருந்து மிகப் பெரிய ஆலமரம் வளர்ந்தோங்கிப் பயன் தரு கிறது. மாபெரும் மரம் வளர்வதற்கான சக்தி அனைத்தும் அந்தச் சிறிய விதையிலே அடங்கிக் கிடக்கிறது. அந்த வித்துக்குப் பீஜம் என்பர்.

இந்தப் பிரபஞ்சமும் பஞ்ச பூதங்களும் சூக்கும நிலையிலிருந்தே தூலமான நிலைக்கு வந்தன. அந்தச் சூக்கும நிலைக்கு முன்பாக அதி சூக்கும நிலையிலிருந்தே வந்தன. ஒவ்வொரு சூக்கும ஒலியிலிருந்தே வெளிப்பட்டன. அந்த நுண் ஒலியை பீஜம் என்பர். பஞ்ச பூதங்கட்கும், ஒவ்வொரு தேவதைக்கும் பீஜ மந்திரம் உண்டு.

## சக்தி

அந்த விதையில் அடங்கிக்கிடக்கிற வீரியம் சக்தி எனப்படும். வீரியம் தேஜஸ், பலம் என்பன சக்தியின் வெளிப்பாடுகள்.

## கீலகம்

சக்தி தேவையின்றி வேறிடத்துக்குச் செல்லமுடியாதபடி கட்டி வைக்கும் முளைக்குச்சி போன்றது கீலகம். ஒரு தேரின் சக்கரத்திற்கு அச்சாணி போல மந்திரத்துக்குக் கீலகம் ஒரு முக்கியமான அங்கம்.

## மந்திரங்களின் ஆற்றல்

மந்திரங்கள் என்பவை சில எழுத்துக்களின் சேர்க்கை. பல மந்திரங்களுக்குப் பொருள் இல்லை. ஆயினும் அந்த மந்திரங்களின் சப்தங் கட்குச் சக்தி அதிகம். பீஜ மந்திரங்கட்கு என்ன பொருள் என்று சொல்ல முடியாது. ஆனாலும் அவற்றில் அளப்பரிய சக்தி அடங்கிக்கிடக்கிறது.

இந்த மந்திரங்களை ஒரு குறிப்பிட்ட எண் ணிக்கை அளவு உருப்போட்டால் அதற்கு உகந்த ஓர் உருவம் உண்டாகி அவ்வுருவம் ஜெபிப்ப வனுடைய கண்ணுக்குத் தோற்றம் அளிக்கும் என்றும், அந்த உருவத்திற்குச் சில காரியங்களைச் செய்யக் கூடிய வலிமை உண்டாகும் என்றும் சொல்வர். இந்த உருவங்களைப் படைக்கக்கூடிய எழுத்துக்களை எவ்வாறு கண்டு பிடித்து இணைத்தனர் என்பது வியப்பான ஒன்று. இந்த எழுத்துக்களையே ஆரம்ப காலத்தில் பீஜ அட்சரம் என்று குறிப்பிட்டனர்.

மேலே குறிப்பிட்ட பீஜாட்சரங்களின் மூலமாக மந்திரங்களை அமைத்து, ஒவ்வொரு மந்திரத் திற்கும் ஒவ்வொரு தேவதையின் பெயரை இட்டு, அவ்வகைத் தேவதைகளின் சக்தியை உணரச் செய்துள்ளனர்.

இத் தேவதைகளில் சிறு தேவதைகள், தேவதைகள், அதிதேவதைகள் என்ற மூன்று



பிரிவுகள் உண்டு. குட்டிச் சாத்தான், யட்சிணி போன்ற தேவதைகள் சிறு தெய்வங்கள்: காளி, துர்க்கை, ஆஞ்சநேயர், நவக்கிரகங்கள் என்பன தேவதைகள்: சிவன், விஷ்ணு, பார்வதி, முருகன், கணபதி என்போர் அதிதேவதைகள்.

ஒவ்வொரு தெய்வத்தின் உருவத்தையும் நேரடியாகப் பார்த்துத் தரிசிக்க வேண்டுமானால் அதற்கு உபாயமாக ஒவ்வொரு மந்திரம் உள்ளது.

மந்திரம் என்பது ஒரு ஒலிக்கோவை. எழுத்துக்களின் கூட்டம்தான். ஒலி வடிவான எழுத்துக்களும் ஒளி வடிவான உருவங்களும் ஒரே உருவத்திலிருந்து வந்தவையே. அவை ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்பு உடையவை. விஞ்ஞானிகள் ஒரு குளக்கரையில் பலவிதமான சப்தங்களை எழுப்பிப் பார்தார்கள்.



அப்போது அவற்றின் அதிர்வுகள் நீரின் மேலே மிதக்கின்ற இலேசான துகள்கள் வெவ்வேறு உருவங்களாக அமைந்ததைக் கண்டு நாதத்துக்கே உருவம் கொடுக்கிற சக்தி உண்டு என்பதைக் கண்டறிந்தார்கள்.

ஒவ்வொரு ராகத்துக்கும் ராக தேவதைகள் உண்டு என்று இசை நூல்கள் கூறுகின்றன.

அக்பரின் சபையில் தான்சேன் என்ற இசைமேதை இருந்தார். இரவு நேரத்திற்குரிய ஒரு ராகத்தைப் பாடுமாறு அரசர் கட்டளை இட்டாராம். அப்போது தான்சேன் ஒரு மந்திரத்தை உச்சரித்தவுடன் அரண்மனையின் எல்லாப் பக்கங்களிலும் இருள் கவ்வியதாம். சில மந்திர உச்சாடனங்களின் மூலம் இயற்கையையே வசப்படுத்தலாம் என்று தந்திர சாத்திரங்கள் கூறுகின்றன.

இறையருளைப் பெறுவதற்கு மந்திர உபாசனை சிறந்த சாதனம். மந்திர ஜெபத்துக்குரிய வழி முறைகளையும் நுட்பங்களையும் தந்திர சாத்திரங்கள் கூறுகின்றன.

மந்திரம் என்றால் தன்னை நினைப்பவரைக் காப்பது என்று பொருள். எல்லாம் வல்ல கடவுளுக்கு வடிவம் மூன்று.

அவை

1. தூல வடிவம்
2. சூக்கும வடிவம்
3. அதி சூக்கும வடிவம்.

அவற்றுள் தூல வடிவம் என்பது மந்திர வடிவம் ஆகும். சூக்கும வடிவம் என்பது உயிருக்குயிராய் நமக்குள்ளே இருக்கிற வடிவம். அதி சூக்கும வடிவம் என்பது உண்மை அறிவாக, ஆனந்த மயமாக உள்ள சிற் சக்தி வடிவம். முன்னைய இரண்டும் பொது இயல்பு. பின்னையது சிறப்பு இயல்பு.

எல்லாவற்றையும் அறியச் செய்யும் ஆற்றல், உயிர்கட்கு அருள் புரியும் ஆற்றல் என்னும் இரு ஆற்றல்களைக் கொண்டவை மந்திரங்கள்.

# நொய்டா மற்றும் டெல்லியில் ஸ்ரீராம நவமி கொண்டாட்டம்

நொய்டாவில் உள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் கார்த்திகேயர் கோவிலில், செக்டார் 62ல், ஸ்ரீராம நவமி தினத்தில், காலை கலச பூஜையுடன் நிகழ்ச்சி துவங்கியது, அதைத் தொடர்ந்து அபிஷேகம் மற்றும் ஸ்ரீராம பரிவாரத்திற்கு சிறப்பு அலங்காரம் ஏற்பாடு செய்யப்பட்டது. அனைத்து பூஜைகளும் பிரம்மஸ்ரீ சங்கர் வாத்யார் மேற் பார்வையில் மணி கண்டன் சர்மா மற்றும் ஸ்ரீ மோஹித் சர்மா ஆகியோரின் உதவியோடு நடை பெற்றது.







தொடர்ந்து ஸ்ரீ ராதே கிருஷ்ணா சமிதியின் சுந் தரகாண்டம் பாராய ணம் நடந்தது. மகா ஆரத்தி, அன்ன தானம், ஆயிரத்து இருநூறுக்கும் மேற் பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலையில், நொய்டாவில் உள்ள VSS பஜன் மண்டலியின் விஸ்வநாதன் குழுவினர் 'திவ்ய நாமம்' வழங்கினர்.

தினந்தோறும் மாலையில், தேவி மஹாத்மியம் மற்றும் பிற தேவி ஸ்லோகங்களை பாராயணம் செய்தனர், அதே நேரத்தில், அம்பா ளுக்கு ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் அர்ச்சனை செய்யப்பட்டது.

VPS நிர்வாகத்தினர் அனைத்து ஆதரவாளர்களுக்கும், உறுப்பினர் கள்: கி பாலாஜி, ராஜு நன்றி தெரிவித்தனர். ஐயர், ராமசேஷன், ராஜேந்திரன், வெங்கடராமன், அரசு மற்றும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலியின் மகளிர் பிரிவு உட் பட பல தன்னார்வலர்களின் பங்க ளிப்புடன் இந்த நிகழ்வு வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த நொய்டா ஆலயம் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வரும் வேத பிரச்சார் சன்ஸ்தான் (VPS) ஆல் நிர்வகிக்கப்படுகிறது.

இதேபோல், கிழக்கு டெல்லி வசுந்தரா என்கிளேவில் உள்ள ஸ்ரீ சங்கடஹர கணபதி கோயிலில், அனைத்து நாட்களிலும், 'வசந்த நவராத்திரி'யின் போது, ஸ்ரீ துர்க்கைக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது.

பக்தர்கள் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் செய்தனர். ஸ்ரீ துர்க்கை ஒன்பது நாட்களும் வெவ்வேறு அலங்காரத்தில் காட்சியளித்தார்.



எஸ்.வெங்கடேசன்

தொடர்ந்து மகா தீபாராதனையும், பிரசாதமும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.இருபது ஆண்டு களுக்கும் மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வரும் வசுந்தரா என்கிளேவ் சர்வேஸ்வர சமாஜ் (VESS) மூலம் இந்தக் கோயில் நிர்வகிக்கப்படுகிறது.

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# போதை வஸ்துவான புகையிலை, கஞ்சா பூமிக்கு வந்த விதம்

பிரம்ம முனிவரும் கோரோக்க நாதரும் உலகில் இறந்த மக்களை மீண்டும் உயிர் கொடுக்க நினைத்தனர் அதற்க்கு சிருஷ்டி, திதி, சங்காரம் திரௌபவம் அனுக்கிரகம் என்ற பஞ்ச கிருத்தியங்களை பெறும்பொருட்டு யாகம் செய்ய நினைத்தனர்.

இந்த யாகத்தால் பூமா தேவிக்கு பிரச்சனை வரும் என்பதால் நந்தி தேவரும் பதஞ்சலி வியாகிரபதர் முதலானோர் சிவனிடம் சென்று யாகத்தை தடுத்து நிறுத்த முறையிட்டனர், சிவனும் தடுத்து நிறுத்த எண்ணினார்.

பிரமமுனியும் கோரோக்கரும் யாகசாலையை நிறுவி அதற்க்கு வேண்டிய நெய் மற்றும் பொருள்களை சேமித்து வைத்து அங்குள்ள தவ முனிவர்கள் முன்னிலையில் மாசி மாதம் பௌர்ணமி திதி மகா நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் இரவு பத்து நாழிகைக்குமேல் யாகத்தை தொடங்கினர்.

காருக பத்தியும் தட்ஷணாக்கினியம், ஆகவ னியம் என்ற மூன்று அக்கினிகளை வளர்த்து, இரவும் பகலும் உபவாசம் இருந்து பல நாட்களாக வேள்வியை வளர்த்து யாகம் செய்தனர்.

இந்த யாகத்தை தடுக்குமாறு பார்வதி தேவியிடம் பரமசிவன் கேட்டுக் கொண்டார்.

அதன்பொருட்டு தேவலோக "மருள்மாயை", "இருள்மாயை" என்னும் இரு அழகிய பெண்களை பூலோகத்தில் சதுரகிரியில் நடக்கும் யாகத்தை தடுத்து நிறுத்துமாறு கூறினார்.

அதன்படி வசீகர அழகுடன் இரு பெண்களும் இந்த யாக குண்டத்தில் இருந்து வெளிவந்தனர்.

எதற்கு இங்கு வந்தீர்கள் என இரு முனிவரும் கேட்க, அதற்க்கு உங்களை மகிழ்விக்க வந்ததாகவும், இரு முனிவர்களையும் வருணனும், அக்னியும் மோகித்துவிட்டதாகவும் இரு பெண்களும் கூறினார்.

முனிவர்களை அடைய வேண்டி விண்ணப் பித்தனர்.

மருள்மாயையையும், இருள்மாயையையும், கோரோக்கரும் பிரம்ம முனிவரும் சேர்ந்து சாபமந்திர உச்சாடனம் செய்து, இரண்டு செடிகளாக மாற்றினர்.

பிரம்ம முனிவரால் சபிக்கப் பெற்ற பெண் யாகப் புகையில் இருந்து வந்ததால் புகையிலை எனப்பட்டது.

கோரோக்கரால் சபிக்கப் பட்ட பெண் யாக நெருப்பின் மாயப் புகையில் தோன்றியதால் அதற்க்கு கஞ்சா எனப் பெயரிட்டனர்.

இந்த இரு பெண்களுக்கும் உதவிய வருணபகவான், அக்னி பகவானையும் இவர்களுடன் இணைத்து இவர்கள் இல்லாமல் இந்த இரண்டு வஸ்துவும் பயன்படாது என்று கூறி நால்வருக்கும் சாபமிட்டனர்.

இவ்வாறு தோன்றியதுதான் புகையிலையும், கஞ்சாவும்.



# சீதைக்கு நிகரான மண்டோதரி விஸ்வரூப தரிசனம் காண்பித்த ராமன்

ராவணனை அழித்த பிறகு, போர்க்களத்தில் ராமபிரான் ஓய்வாக தரையை நோக்கியபடி அமர்ந்திருந்தார்....!!

அப்போது ஒரு பெண்ணின் நிழல் தெரிந்தது...!!

அந்த நிழலுக்குச் சொந்தக்காரியான பெண், அவரது திருப்பாதங்களைத் தொட முயற்சிப்பதை, நிழலின் அசைவின் மூலம் புரிந்துகொண்டார் ராமபிரான்...!! உடனே தனது காலை உள்ளிழுத்துக் கொண்டார்...!!

“நீ யாரம்மா?” என்றார்....!!

“நான் ராவணனின் மனைவி மண்டோதரி....!! என் கணவரை யாராலும் வெல்ல முடியாது என இருமாந்திருந்தேன், ஆனால், அவரையே ஒருவன் கொன்று விட்டான் என்றால், அவனி டம் ஏதோ உயர்ந்த குணம் இருக்க வேண்டும் என நினைத்தேன், மேலும் சத்திரிய குல தர்மப்படி, கணவனை இழந்த பெண்ணை வெற்றி பெற்றவன், என்ன வேண்டுமானாலும் செய்யலாம், ஆனால் நீ என்னிடம் வரவில்லை, ஆச்சரியப்பட்டேன், இங்கே நீ, என் நிழல் உன் மீது படுவதைக் கூட விரும்பவில்லை என்னும் போது, உன் சிறந்த குணத்தை



என்னவென்பேன்.



என் கணவரிடம் கூட, ரகு குலத்தில் உதித்த ராமன், மனிதன் அல்ல, உலகைக் காக்கும் பரம்பொருள், விஸ்வரூபன், அவனது திருநாமம் எல்லாப் பாவங்களையும் நொடிப் பொழுதில் போக்கவல்லது, அவன் வேதத்தின் சாரம்! ராமன் சாட்சாத் தெய்வ வடிவம்! அவனிடம் பகையை ஒழித்து சீதையை விட்டுவிடுங்கள்’ என்று மன்றாடினேன்...!!

அவர் கேட்கவில்லை...! உன் வெற்றிக்கு காரணம், என் கணவரிடம் இல்லாத ஒரு நற்குணம் உங்களிடத்தில் இருந்தது தான், அதுதான் தங்களின் ஏகபத்தினி விரதத்தன்மை, அதனால் தான் நீ வென்றாய்,” என்றாள்.

அனைத்தும் கேட்ட ராம பிரான் சிறு புன்னகை புரிந்தார்...!!

தன் சுயவடிவான 'நாராயணனாக' அவளுக்கு 'விஸ்வரூப தரிசனம்' கொடுத்தார்.....!!

ராமாயணத்தில் பாக்கியவதியாகத் திகழ்ந்தவள் மண்டோதரி...!

அனுமன் இலங்கை சென்று ராவணனின் அந்தப்புரம் சென்ற போது, மண்டோதரி ஒழுக்கமான உடை அலங்காரத்தை கண்டு, 'இவள் சீதையாக இருப்பாளோ’ என்று சந்தேகம் கொண் டான் அனுமன்....!!

அந்தளவுக்கு ஒழுக்கமுள்ளவளாக விளங்கிய தால் தான், கெட்டவனுக்கு வாழ்க்கைப்பட்டும் மண்டோதரிக்கு 'நாராயணின் விஸ்வரூப தரிசனம்' பெற்றாள்....!!

நம்முடைய பயபக்தி, அன்பு, ஒழுக்கம், இறைச்சேவை, அப்பழுக்கற்ற தூய உள்ளம் என இவையே இறைவனின் அருள் தரிசனம் பெறும் வழிமுறையாகும்.....!!

ஆகவே தான் அசுரகுலத்தில் பிறந்தாலும்,

# கவலைகளை தீர்த்துவைக்கும் திருச்செந்தூர் முருகன்



திருச்செந்தூர் முருகனை தரிசித்தால் எந்தக் கவலையும் அலையைப் போன்று திரும்பிச் சென்றுவிடும்.

இதற்கு உதாரணமாக, திருச்செந்தூர் மூலவர் குகை கடல் மட்டத்தில் இருந்து பத்து அடி கீழே உள்ளது. சுனாமி வந்த நேரத்தில் திருச்செந்தூர் முருகன் கோவிலில் என்ன நடந்தது தெரியுமா?

கோவில் சுவரை எப்பவும் தொட்டுக்கொண்டிருக்கும் கடல் ரெண்டு கிலோமீட்டர் வரை உள்வாங்கி பின்னோக்கி சென்றுவிட்டது. அதுவரை யாரும் பார்க்காத மிகப்பெரிய பாறைகள் எல்லாம் கடலில் தெரிந்தது.

கோவிலுக்கும், கோவிலை சுற்றி இருந்த எந்த மக்களுக்கும் சிறு தொந்தரவு கூட ஏற்படவில்லை. திருச்செந்தூர் முருகன் கோவிலில் இருந்து 2 மைல் தொலைவில் உள்ள ஜீவா நகரில் கூட சுனாமி அலைகள் வந்து பல சேதாரங்களை ஏற்படுத்தியது. ஆனால், திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு மட்டும் எதுவும் ஆகவில்லை.

அவ்வளவு வேகமான அலைகளுடன் வரும் கடல் முருகனின் சன்னிதானத்தை அடைந்தவுடன் அமைதியாக திரும்பி செல்லும். இதை நேரில் சென்றால் பார்க்கலாம்.

அதேபோல நாம் மனதில் எவ்வளவு கவலைகளுடன் இந்த கோவிலுக்கு சென்றாலும் நம்மை சாந்தப்படுத்தி முருகப்பெருமான் அனுப்பி வைப்பார் என்பது ஐதீகம்


அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்

SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 160 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# ஆணவத்தை வென்றவன் கொல்பவன் என்பதை விளக்கவே மயில் வாகனம் கொண்ட முருகன்

திருமுருகனின் திருக்கரங்களில் இருக்கும் வேலுடைய சிறப்பினை இதுவரை பார்த்தோம். முருகனுடைய ஆயுதங்கள் மட்டுமல்ல அவனுடைய பிறப்பே பல சிறப்புகளைதன்ன கத்தே கொண்டது. சூரபத்மன் என்ற அசுரன் சாகாத வரம் பெற்று ஆணவம் தலைக்கேறி தேவாதி தேவர்களையும் ரிஷிகள் முனிவர்களையும் கொடுமை படுத்தினான் யாகங்களும் தான தர்மங்களும் உலகத்தில் எங்கும் நடைபெறாத வண்ணம் தடுத்து நிறுத்தினான் அப்பாவி உயிர்கள் பலவற்றை கொன்று வடிந்தோடும் குருதி சேற்றில் ஆனந்த கூத்தாடினான்.

அவனை அழிக்க முருக பெருமான் வந்தார் வென்றார் என்று நாம் அனைவரும் அறிவோம். முருகனின் இத்தகைய அவதார சிறப்பை கந்த புராணம் பரிபாடல் கந்தர் கலிவெண்பா போன்ற அமுதினினும் இனிய தமிழ் நூல்கள் அழுகபட சொல்வதை சிறிது சுவைத்து பார்ப்போம்.



கடவுள் உருவாக்கிய மதம்

வெண்மேகங்கள் பவனி வருகின்ற திருக்கைலாய மலையில் அன்னை ஆதிபராசக்தியோடு நம் அப்பன் சிவபெருமான் அமர்ந்திருக்கிறான். அப்போது அசுரனின் கொடுமைகளை தாங்காத தேவர்கள் வந்து அவரிடம் தங்களது கஷ்டங்களை முறையிட்டு நிற்கிறார்கள். அடியவர்களின் குறைகளை கேட்டு அருள்பாலிக்க தன் இருப்பிடத்தில் இருந்தே இறங்கி ஓடோடி வரும் எம்பெருமான் தன்னிடத்திற்கே வந்து தன்னையே சரணமென கருதி தன்னிடமே முறையிட்ட பிறகு சும்மா இருப்பாரா? தனது ஈஸ்வர தத்துவமான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம் என்ற தனது ஐந்து முகங்களோடும் கீழ்நோக்கி இருக்கும் அதோ முகமென்னும் ஆறாவது முகத்தையும் கொண்டு ஆறு நெற்றி கண்ணில் இருந்து தீ பொறிகள் ஆரை வெளியிடுகிறார்.

ஈசனது முகத்திலிருந்து வரும் ஆறு அக்னி



ஜுவாலைகளை உலகத்தால் தாக்குபிடிக்க முடியாமல் அண்ட சராசரங்கள் அனைத்தும் அஞ்சி நடுங்கின கிடுகிடுத்தன அதனால் தன்னிடமிருந்து வெளிவந்த நெருப்பு பொறிகளின் வீரியத்தை தன்னால் மட்டுமே கட்டுபடுத்த முடியும் என்று கருதிய ஈசன் ஆறு பொறிகளையும் தனது திருக்கரத்தில் ஏந்தி அதை குளிர்விக்க வாயு தேவனிடம் கொடுத்தார். ஈசனின் அக்னியை தாங்க முடியாத வாயு அதை அக்னி பகவானிடம் கொடுத்தார். உலகத்தையே சுட்டெரிக்கும் நெருப்பு கடவுளுக்கு சிவ நெருப்பை தாங்க முடியவில்லை எனவே அவன் கங்கை ஆற்றில் விட்டு விட்டான் குளிர்ந்த கங்கை ஆறு கொதிக்கும் நீராகி விட்டது. எனவே கங்கை தனது சூட்டை தனித்து கொள்ள சிவ பொறிகள் ஆறையும் சரவண பொய்கையில் தந்தாள்.

சரவண பொய்கைக்கு வந்த ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகளாக மாறியது. அந்த குழந்தைகளுக்கு கார்த்திகை பெண்களாகிய ஆறு பேர் பாலூட்டி வளர்த்தார்கள். சிவ பெருமான் கார்த்திகை பெண்களிடம் வளருவது நம் குழந்தையே என்று உலகத்தின் தாயிடம் தெரிவிக்க அன்னை அன்புருவாகி கருணை என்னும் கங்கை தனக்குள் பொங்கி வழிய ஆறு குழந்தைகளின் இளந்தளிர் மேனியை வாரி


ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



அணைத்தாள் அப்போதே அங்கங்கள் ஒன்றாகி முகங்கள் ஆறு கொண்ட ஆறுமுகனின் திரு அவதாரம் நிகழ்ந்தது. ஆறுமகம் கொண்ட அந்த குழந்தைக்கு கந்தன் என்று அம்மையப்பன் பெயரிட்டார்கள். முருகனின் இத்தகைய பிறப்பை பற்றி சொல்லும் போது சிலருக்கு ஒரு சந்தேகம் வரும். நெருப்பில் இருந்து ஒரு குழந்தை தோன்றியது என்று சொல்வது அறிவு பூர்வமாக நோக்கும் போது நம்ப கூடியதாக இல்லையே என்று தோன்றும் ஆனால் அப்படி தோன்ற வேண்டிய அவசியமே இல்லை காரணம் நமது புராணங்கள் எல்லாமே பல விஞ்ஞான ரகசியங்களை பரிபாசையில் சொல்லுகின்றன இதில் முருகனின் பிறப்பும் ஒரு விஞ்ஞான ரகசியமே ஆகும்.

தினசரி காலையும் மாலையும் வணங்கப்படும் சூரியன் விஞ்ஞான பார்வையில் ஒரு எரிகோளே ஆகும். அதாவது சதாசர்வ நேரமும் எரிந்து கொண்டே இருக்கும் ஒரு நெருப்பு பந்து சூரியன் அந்த நெருப்பு பந்தை மூன்றுவிதமாக விஞ்ஞானம் பிரிக்கிறது முதலாவது நடுவில் உள்ள ஒளிக்கோலம் இதிலிருந்து தான் வெளிச்சமும் வெப்பமும் உண்டாகிறது. இரண்டாவது நடுப்பகுதிக்கு அடுத்துள்ள வண்ண பகுதியாகும் இது ஹைட்ரஜன் வாய்வு நிறைந்தது இதற்கு அடுத்து வெண்மையாக முத்து போல் தெரியும் பகுதி இருக்கிறது. இந்த மூன்றாவது பகுதியில் உள்ள வெப்பமே பூமி உட்பட மற்ற கிரகங்களுக்கு சென்று உயிர் துடிப்பை ஏற்படுத்துகிறது.

சூரியனை ஒரு நெருப்பு பந்து என்று மட்டுமே கருதிவிடவும் முடியாது. அது பல பொருட்களை தன்னை நோக்கி இழுக்கும் ஆற்றல் கொண்ட பிரம்மாண்டமான காந்தமும் ஆகும். இந்த காந்த சக்தியாலையே சூரியனை சுற்றி உள்ள எல்லா பொருட்களும் ஒழுங்குமுறை மாறாமல் ஈர்க்கப்பட்டு முறைப்படி நகர்ந்து வருகிறது. சூரியனின் நகர்வு எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் DIFFUSED GAS என்ற ஆறுவிதமான வாயுவுகள் பரவுகின்றன. இந்த ஆறு வாயுக்களும் கார்த்திகை நட்ச்சத்திர கூட்டத்தால் ஈர்க்கபடுகிறது. கார்த்திகை நட்சத்திர குடும்பத்தில் ஆறு நட்ச்சத்திரங்கள் இருப்பது இங்கே குறிப்பிட தக்கது.

உலகுக்கு ஒளி கொடுக்கும் சூரியனை சிவபெருமானாகவே நமது முன்னோர்கள்கருதுகிறார்கள். சிவன் என்றாலே வெளிச்சம் சூரியன் என்பது தான் அர்த்தமாகும்.

சூரியனை சுற்றியுள்ள மூன்று ஒளிப்பகுதிகளும் சிவபெருமானின் மூன்று கண்களாகும். சூரிய வெளிச்சத்தை நேரடியாக உடனுக்குடன் பெறுவது கார்த்திகை நட்சத்திரங்கள் ஆகும்.

இதனாலையே சிவப்பொறிகள் ஆரை கார்த்திகை நட்சத்திரங்கள் தாங்கி வளர்க்கின்றன என்று சொல்வார்கள், கார்த்திகை நட்சத்திரங்கள் செவ்வாயின் ஆட்சிக்கு உட்பட்ட மேஷ ராசி மண்டபத்தில் அடங்குகிறது.

செவ்வாய் கிரகத்தை போர் குணமிக்க கிரகமாக கருதுவார்கள். செவ்வாயின் அதி தேவதையான முருக பெருமானும் போர் கடவுள் தேவ சேனாதிபதி ஆவார் இது தான் முருக னின் அவதாரம் சொல்லும் பாரத விஞ்ஞான உண்மையாகும்.

அம்மை அப்பனின் அன்பு குழந்தையான சரவணன் சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் ஆகிய அசுரர்களை போர்களத்தில் வெற்றி பெற துணையாக நவ வீரர்கள் பார்வதி தேவி யால் தோற்றுவிக்க பட்டார்கள். அதாவது உமையன் னையின் காற்சிலம்பில் இருந்து மாணிக்க வல்லி, முத்து வல்லி, புஸ்பராக வல்லி, கோமேதக வல்லி, வைடூர்ய வல்லி, வைர வல்லி, மரகத வல்லி, பவள வல்லி, நீல வல்லி என்ற நவ சக்திகள் தோன்றி அவர்கள் சிவபெருமானை விருப்பமோடு நோக்க அவர்களிடமிருந்து. வீரவாகு, வீர கேசரி, வீர மகேந்தரர், வீர மகேஸ்வரர், வீர புரந்தவர், வீர ராட்சசர், வீர மார்த் தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்னும் ஒன் பது வீரர்கள் தோன்றினார்கள் இவர்களை படைத்தளபதியாக கொண்டு முருகன் சூரனை வென்றான் என்பது புராணங்கள் சொல்லும் ஆதாரங்களாகும்.

சூரபத்மனை இரண்டு கூறுகளாகயுத்த முடிவில் பிளந்து முருகன் கொன் றான். இரண்டு துண்டுகளான சூரனின் உடல் பகுதிகள் சேவலாக வும் மயிலாகவும் உருமாறிவந் தன அவைகளை தனது வெற்றி யின் சின்னமாக முருகன் ஏற்று கொண்டான். மயில் என்பது முருக னின் வாகனம் என்று நமக்கு தெரியும். இந்த மயில்வாகனத்தை ஆணவத்தின் உருவமாகவும். விந்துதத்துவத்தின் விளக்கமாகவும் குடில சக்தி என்றும் கௌமார மரபு சொல்கிறது.





யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

வானவில்லில் உள்ள நீலம் முதல் சிவப்பு வரை உள்ள ஏழு நிறங்களையும் மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் ஆகிய எழுவையான ஆணவத்தின் தன்மையோடு ஒப்பிட படுகிறது. இந்த் ஏழு வண்ணத்தையும் மயிலில் காணலாம். எனவே தான் மயிலானது ஆணவத்தின் உருவமாக சொல்லபடுகிறது.

இந்த ஏழு வண்ணத்தில் இருந் தே உலகில் உள்ள அனைத்து வண்ணங்களும். பிறந்தன என்பத னால் இதுவே விந்து தத்துவமாகவும் இருக்கிறது. முருகனுக்கு யானை, ஆட்டு கிடா, போன்ற வாகனங்கள் இருந்தாலும் ஆணவத்தை வென்ற வன் ஆணவத்தை கொல் பவன் என்பதை விளக்க மயில் வாகனமே சிறப்பான வாகனமாக பக்தர்களால் கருதபடுகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# குருகுல கல்வியை அழித்து

# மூளையில் குப்பையை திணித்த ஆங்கிலேயன்



இந்தியாவில் குறிப்பாக மாற்று மதத்தை மாறியவர்களின் பெரும்பாலான புலம்பல்... வெள்ளைக்காரன் இந்தியாவிற்கு வராதிருந்தால், இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் படிப்பறிவே பெற்றிருக்க மாட்டார்கள்.

இந்த வாதம் குறிப்பாக மதம் மாறியஒருசிலர் முன்வைக்கும் வாதமாகும், இதை சாதாரண மான ஒரு நபர்கள் கூறினால், அவர்களின் முட்டாள் தனத்தை நகையாடிவிட்டு சென்றுவிடலாம், ஆனால் உயர் பதவியில், சமூகத்தில் வி.ஐ.பி. அந்தஸ்தில் இருக்கும் ஒருசிலர்கூட இந்த வாதத்தை கூறுவதிலிருந்து அவர்கள் எந்தள விற்கு முட்டாள்தனமாக வாழ்கிறார்கள் என்பது தெளிவாக தெரிந்து கொள்ளலாம்.

'இங்கிலாந்தில்' 1811–இல் தான் முதல் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது.

ஆனால் அந்த நேரத்தில் நமது இந்தியாவில் 7,32,000 குருகுலங்கள் இருந்தன.

இந்த குருகுலத்தில் அனைத்து ஜாதியினரும் கல்வியை கற்றுள்ளனர்.

வளமும், உழைப்பும் இல்லாத வெள்ளைக்காரன் ஒவ்வொரு நாடாக கொள்ளை அடித்து தங்களது சொத்தை சேர்த்துக் கொண்டிருந்த நேரத்தில், உலகில் பல இடங்களில் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் கடைபிடிக்கப்பட்டுவந்த கலாச் சாரத்தை அழிக்கத் துவங்கினான்.



இந்தியாவை கொள்ளையடிக்க, குப்பையை கல்வி என்ற பெயரில் இந்தியர்களின் மூளையில் திணித்த மெக்காலோ என்பவன்.

தனக்கென சுய கலாச்சாரம் இல்லாதவெள்ளைக்காரன், ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்திலும் மிகவும் பிரபலமாக கடைபிடித்துவந்த பழக்கவழக்கங்களில் ஒருசில மாற்றங்களை செய்து, தங்களது வெற்று கலாச்சாரத்தில் புகுத்தி வந்தான்.

(இதனால்தான் வெள்ளைக்காரனின் கடவுளுக்கு ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மாதிரி கடைபிடித்து வருகின்றனர்)

இதில் இந்தியாவில் வெள்ளைக்காரனின் கலாச்சார திணிப்பு பெரிய அளவில் எடுபடாததால், முதலில் கலாச்சாரத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வேலையில் இறங்கினான்.

இதற்கு இந்தியாவில் இருந்த ஒருசில எட்டப்பர்களை தங்கள் வலைக்குள் விழ வைத்து, பெண், பொன் போன்றவற்றிற்கு அடிமையாக்கி அவர்களின் வாயிலாக இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் கடைபிடித்துவந்த கலாச்சாரத்தை மாற்றும் பணியினை துவக்கினான்.

அந்தவகையில் இந்திய கல்வியைப் பற்றி ஒரு ஆய்வை மேற்கொள்ள குழு ஒன்றை நிறுவினான்.

மெக்காலோ என்பவன் தலைமையில் பல பிரிவுகளாக இந்த ஆய்வு நடைபெற்றது.

பல ஆங்கிலேயர்கள் இந்தியாவின் கல்வி முறை பற்றி தங்கள் அறிக்கைகளை அளித்தனர். பிரிட்டிஷ் அதிகாரிகளில் ஒருவர் ஜி.டபிள்யூ. லூதர் மற்றும் தாமஸ் மன்றோ! இருவரும் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு பகுதிகளில் ஆய்வு செய்தனர்.

வட இந்தியாவை (உத்தர பாரத்) ஆய்வு செய்த லூதர், இங்கு 97 % கல்வியறிவு இருப்பதாக எழுதினார்.

தென்னிந்தியாவை (தக்ஷின் பாரத்) ஆய்வு செய்த முன்ரோ, இங்கு 100% கல்வியறிவுஇருப்பதாக எழுதினார்.

இதில் கூடுதலாக உலகில் இல்லாத அனைத்தையும் இந்த குருகுல கல்விமுறை பயிற்றுவித்து வருவதாகவும் ஒரு புள்ளி விவரம் கூறியது.

**குறிப்பாக குருகுலங்கள் கற்பித்த பாடங்கள் வெள்ளைக்காரனை கதி கலங்க வைத்தது.**

இந்தியாவின் பெரும்பாலான 'குருகுலங்கள்' பின்வரும் பாடங்களைக் கற்பித்தன.

| | |
|---|---|
| 1 | அக்னி வித்யா (உலோகவியல்) |
| 2 | வாயு வித்யா (காற்று) |
| 3 | ஜல் வித்யா (நீர்) |
| 4 | ஆன்ட்ரிக்ஸ் வித்யா (விண்வெளி அறிவியல்) |
| 5 | பிரித்வி வித்யா (சுற்றுச்சூழல்) |
| 6 | சூரிய வித்யா (சூரிய ஆய்வு) |
| 7 | சந்திர மற்றும் லோக் வித்யா (சந்திர ஆய்வு) |

| | |
|---|---|
| 8 | மேக் வித்யா (வானிலை முன்னறிவிப்பு) |
| 9 | தாது ஊர்ஜா வித்யா (பேட்டரி ஆற்றல்) |
| 10 | தின் அவுர் ராத் வித்யா. |
| 12 | சிருஷ்டி வித்யா (விண்வெளி ஆராய்ச்சி) |
| 13 | ககோல் விக்யான் (வானியல்) |
| 14 | புகோல் வித்யா (புவியியல்) |
| 15 | கால் வித்யா (நேர ஆய்வுகள்) |
| 16 | பூகார்ப் வித்யா (புவியியல் மற்றும் சுரங்கத் துறை) |
| 17 | கற்கள் மற்றும் உலோகங்கள் (கற்கள் மற்றும் உலோகங்கள்) |
| 18 | ஆகர்ஷன் வித்யா (ஈர்ப்பு) |
| 19 | பிரகாஷ் வித்யா (ஆற்றல்) |
| 20 | சஞ்சார் வித்யா (தொடர்பு) |
| 21 | விமான் வித்யா (விமானம்) |
| 22 | ஜலயன் வித்யா (நீர் கப்பல்கள்) |
| 23 | அக்னேயா அஸ்ட்ரா வித்யா (ஆயுதங்கள் – வெடிமருந்துகள்) |
| 24 | ஜீவவித்யான் வித்யா (உயிரியல், விலங்கியல், தாவரவியல்) |
| 25 | யக்ஞ வித்யா (பொருள் Sic) |
| 26 | வியாபர் வித்யா (வர்த்தகம்) |
| 27 | க்ரிஷி வித்யா (விவசாயம்) |
| 28 | பசு பாலன் வித்யா (கால்நடை பராமரிப்பு) |
| 29 | பக்ஷி பாலன் (பறவை வளர்ப்பு) |
| 30 | யான் வித்யா (மெக்கானிக்ஸ்) |
| 32 | வாகன வடிவமைப்பு |
| 33 | ரதங்கர் (ரத்தினங்கள் – நகை வடிவமைத்தல்) |
| 36 | கும்ஹார் வித்யா (மட்பாண்டம்) |
| 37 | லாகு (உலோகம் மற்றும் கருப்பசாமி) |
| 38 | தக்காஸ் |
| 39 | ரங் வித்யா (சாயமிடுதல்) |
| 40 | கதவாகர் |
| 41 | ரஜ்ஜுகர் (லாஜிஸ்டிக்ஸ்) |
| 42 | வாஸ்துகார் வித்யா (கட்டிடக்கலை) |
| 43 | கானா பனனே கி வித்யா (சமையல்) |
| 44 | வாகன் வித்யா (ஓட்டுநர்) |
| 45 | நீர்வழி மேலாண்மை |
| 46 | குறிகாட்டிகள் (தரவு உள்ளீடு) |
| 47 | கஷலா மேலாளர் (கால்நடை பராமரிப்பு) |
| 48 | பாக்வானி (தோட்டக்கலை) |
| 49 | வான் வித்யா (வனவியல்) |
| 50 | சஹ்யோகி (மருத்துவ உதவியாளர்கள்) |


இந்த கல்வி அனைத்தும் குருகுலத்தில் கற்பிக்கப்பட்டது.

இந்த கல்வி முறையை பார்த்து அதிர்ச்சி யடைந்த வெள்ளைக்காரக் கொள்ளையர்கள் அவசர ஆலோசனையில் ஈடுபட்டனர்.

பாரதத்தை அடிமைப்படுத்தப்பட வேண்டுமானால், அதன் பூர்வீக மற்றும் கலாச்சார கல்வி முறை* முற்றிலும் அழிக்கப்பட்டு replaced 'ஆங்கிலக் கல்வி முறையால் மாற்றப்பட வேண்டும் என்று மக்காலே தெளிவாகக் கூறினான்.

இந்த முறையில் இந்திய கல்விமுறையை அழித்தால்தான் காலப்போக்கில் இந்தியர்கள் உடல் ரீதியாக இந்தியர்களாக இருப்பார்கள், மனதளவில் வெள்ளைக்காரனுக்கு அடிமை யாக இருப்பார்கள். காலப்போக்கில் நாம் இந்த நாட்டைவிட்டு வெளியேறினாலும், அல்லது கான்வென்ட் பள்ளிகள் அல்லது ஆங்கிலப் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறும் போது, அவர்கள் பிரிட்டிஷாரின் நலனுக்காக வேலை செய்வார்கள் என்று சதி திட்டம் தீட்டி னார்கள்.

இன்னும் தெளிவாக கூறவேண்டுமானால் ஒரு பயிர் நடவு செய்வதற்கு முன்பு ஒரு




பண்ணை முழுமையாக உழப்படுவது போல், அதை உழுது, ஆங்கிலக் கல்வி முறையில் கொண்டு வர வேண்டும். இதற்கு முதலில் குருகுலங்களை அழிக்க வேண்டும் என்று மெக்காலோ திட்டத்தை வெளிப்படுத்தினான்.

அதனால்தான் அவர் முதலில் குருகுலங்களை சட்டவிரோதமாக அறிவித்தார். பின்னர் அவர் சமஸ்கிருதத்தை சட்டவிரோதமாக அறிவித்து குருகுலங்களை தீ வைத்து, அதில் பணியாற்றிய ஆசிரியர்களை அடித்து சிறையில் அடைத்தனர்.

1835-இல் இந்திய கல்வி சட்டம் வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்பட்டது. ஆனாலும் 1850 வரை இந்தியாவில் '7 லட்சத்து 32 ஆயிரம்' குருகுலங்கள் மற்றும் 7,50,000 கிராமங்கள் இருந்தன.

வெள்ளைக்கார கல்விச் சட்டம் முழுமையாக அனைத்து தரப்பினரும் பெரும்பாலும் ஆதரவு தர முன்வரவில்லை. இந்த சமயத்தில் இந்திய மக்களிடையே கல்வி சம்பந்தப்பட்ட பிரிவினையை தூண்டுவதற்காக உயர்ஜாதி, கீழ்ஜாதி என்ற ஆயுதத்தை பயன்படுத்தி இந்தியாவில் இருந்த ஒருசிலரை தங்களது அடிவருடிகளாக மாற்றி, அவர்கள் மூலம் குருகுல கல்விமுறையைப்பற்றி வீண் வதந்திகளைப் பரப்பப்பட்டது.

அதாவது கிட்டத்தட்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குருகுலம் இருந்தது. அந்த குருகுலங்களை அழிக்க வெள்ளைக்கார கான்வென்ட் கல்விகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

குருகுலங்கள் ஜாதி பாகுபாடு பார்க்கின்றன, குழந்தைகளை வெள்ளைக்கார கல்வி நிறுவனங்களில் சேர்க்குமாறு இந்தியாவில் இருந்த எட்டப்பர்கள் மூலம் வதந்தி பரப்பப்பட்டது.

இதனால் மளமளவென்று குருகுலங்கள் அழிந்தது. 1835 இல் உருவாக்கப்பட்ட இந்திய கல்வி சட்டம் 1858 இல் மீண்டும் திருத்தப்பட்டது). இதை திருத்தியவன் 'லார்ட் மெக்காலே' என்ற சூழச்சிக்காரன்.

ஒருவழியாக, குருகுலங்கள் ஒழிக்கப்பட்டு ஆங்கிலக் கல்வி சட்டப்பூர்வமாக்கப்பட்டு கல்கத்தாவில் முதல் கான்வென்ட் பள்ளி திறக்கப்பட்டது. அந்த நேரத்தில் அது 'இலவச பள்ளி' என்று அழைக்கப்பட்டது.

இந்த சட்டத்தின் கீழ், கல்கத்தா பல்கலைக் கழகம், பம்பாய் பல்கலைக்கழகம் மற்றும் மெட்ராஸ் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. வெள்ளைக்காரன் இந்தியாவை விட்டுவிரட்டப் பட்டாலும் இந்த மூன்று அடிமைப் பல்கலைக்கழகங் கள் இன்னும் வெள்ளைக்காரக் கல்விமுறையை நாட்டில் பரப்பப் பயன்படுகிறது.

அன்றே திட்டம் போட்ட மெக்காலோவின் கூற்றுப்படி, கான்வென்ட் பள்ளிகள் இந்தியர் களைப் போல தோற்றமளிக்கும் ஆனால் மூளை யால் ஆங்கிலேயருக்கு அடிமையாக இருக்கும்.

குழந்தைகளை வெளியே கொண்டுவரும், அவர்களுக்கு தங்கள் நாட்டைப் பற்றி எதுவும் தெரியாது. அவர்களுக்கு அவர்களின் கலாச் சாரம் பற்றி எதுவும் தெரியாது, அவர்களின் பாரம்பரியம் பற்றி எந்த எண்ணமும் இருக் காது, அவர்களுக்கு சொந்த மொழியில் தவறு இல்லாமல் எழுதவும் படிக்கவும் தெரியாது.

அத்தகைய குழந்தைகள் இந்த நாட்டில் இருக்கும்போது, ஆங்கிலேயர்கள் சென்றாலும், ஆங்கிலேயர்கள் இந்த நாட் டை ஆள்வதைப் போன்றே இருக்கும்.

இதனால்தான் இன்றுமெத் தப் படித்தவர்களிடம் அவரவர் மொழியில் ஒரு கடிதத்தை எழுதச் சொன்னால் தவறின்றி எழுதத் தெரியாது.

அதேப்போன்று கல்லூரி வரை படித்திருந்தாலும், அனுபவக் கல்விபற்றி அவர்கள் அறியாமலேயே வீணான குப்பைகளை மட்டுமே படித்திருப்பார்கள்.

**வெள்ளைக்காரன் உலகம் முழுவதும் கொள்ளையடித்து தனது நாட்டை வளமாக்கினாலும், ஒருசில நாடுகளில் இன்று வெள்ளைக்காரன் தங்களை அடிமைபடுத்திய அரிச்சுவடே இல்லா மல் அழித்துவிட்டனர்.**

**ஆனால் இந்தியாவில் மட்டும் வெள்ளைக் காரன் தனது விந்துக்களாக பலரை விட்டுச் சென்றதால், இன்றும் வெள்ளைக்காரன் புராணம் பாடும் பெரும் தலைவர்கள், தொண்டர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.**

"ஊரோடு ஒத்து வாழ்" என்ற கோட்பாட்டின்படி நாம் நமது பிள்ளைகளை மெக்காலோ கல்வி முறையில் படிக்கவைத்தாலும், நமது கலாச்சாரம், நமது சுதந்திர போராட்ட வரலாறு, (உண்மையாக போராடியவர்கள் வரலாறு) போன்றவற்றையும், நமது கலாச்சாரத்தின் உச்சம், நமது கட்டிடக் கலையின் உச்சமாக திகழும் கோவில் கொத் தளங்கள் போன்றவற்றின் சுய வரலாற்றை தெரியப்படுத்துவோம்.

உலகத்திலேயே மனிதப் பிறவிக்கு பின்பு உள்ள நிலைகளை தெளிவாக அடைய உதவும் ஒரே மதமான நமது இந்து மதத்தினைப் பற்றிய அறிவினை ஊட்டி வளர்ப்போம்.

இன்றைய பெரும்பாலான குழந்தைகள், அன்பு, பாசம், பெற்றோருக்கு மரியாதை தராமல் நடப்பது, ஆசிரியர்களை அவமதிப்பது, சகோதர சகோதரி பாசம் இல்லாமல் இருப்பது, கேளிக்கை, காமம், குரோதம், உச்சக்கட்ட போதை போன்றவற்றிற்கு முக்கிய காரணமே மெக்காலோ கல்வி முறைதான்.



முடிந்த அளவு நமது இந்திய கலாச்சாரத்தை நம் பிள்ளைகளுக்கு விரிவாக எடுத்து சொல்லி, மெக்காலோ சூழ்ச்சி வலையில் சிக்கியுள்ள நமது சந்ததியையும், சமூகத்தையும் மீட்க நமது வீட்டிலேயே நமது குழந்தைகளுக்கு நாமே குருவாக மாறி நமது நாட்டின் பெருமை, வளமைகளை எடுத்து கூறிவருவோம். வரும்கால சந்ததியினரை வாத்துக்கூட்டமாக மாறுவதை தடுத்து நிறுத்துவோம்.

– கீதாராஜன்
தொடர்பு எண்: 9444228203

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



# ஆன்மீக வழியில் அமைதி

நான் யார்? அல்லது ஆத்மா என்றால் என்ன? என்பதைப் பற்றி ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்த்தால் எது அறிவு சொரூபமாக 'சத்' சொரூபமாக பூரண சொரூபமாக அதாவது எது அழியாமல் நிரந்தரமாக இருக்கிறதோ அது ஆத்மாவின் சொரூபம் ஆகும். ஜடமாக, அநித்தியமாக, அழியக்கூடியதுமான ஸ்தூல சரீரங்களை 'நான்' என்று மனிதர்கள் தன்னை எண்ணிக்கொண்டு இருப்பதால்தான் அது 'நான் அல்ல' என்று சாஸ்திரம் கூறுகிறது. ஸ்தூல சரீரங்கள் 'நான் அல்ல' என்று மனிதன் மனதில் நினைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு மனிதன் நினைத்து செயல்படும்போது அவன் தேடும் விரும்பும் மன அமைதி அவனை அறியாமல் அவனைத் தேடி வரும் என்பதில் ஐயமில்லை. இந்தப் பிரபஞ் சத்தை யார் சிருஷ்டித்தாரோ அவர் ஈஸ்வரன் என்று அழைக்கப்படுகிறார். பொதுவாக படைப்பு பற்றி நாம் சிந்திக்கும்போது இந்த உலகத்தைப் படைத்தவனைப் பற்றியும் நம்மை அறியாமல் சிந்திக்க ஆரம்பித்து விடுகிறோம். இந்தப் படைப்பு அல்லது பிரபஞ் சம் யாரிடமிருந்து வரப்பெற்றதோ அவரை நாம் ஈஸ்வரன் என்று அழைக்கிறோம். இந்தப் படைப்பையும் படைத்தவரின் உறவைப்பற்றி சிந்திக்கும்போது ஈஸ்வரனின் உடல்தான் இந்த உலகம் என்று சாஸ்திரம் கூறுகிறது.



63

நாம் காணும் உலகம் யாரிடமிருந்து வரப்பெற்றதோ அவர் ஈஸ்வரன் என்று அழைக்கப்படுகிறார். அதாவது ஈஸ்வரன் நாம் காணும் இந்த உலகத்தைப் படைத்தான். ஈஸ்வரனிடம் இரு அம்சங்கள் இருக்கிறது. ஈஸ்வரனின் ஒரு அம்சம் பிரம்மா அல்லது பராமாத்மா. ஈஸ்வரனின் மற்றொரு அம்சம் மாயாவாக இருக்கிறது. ஈஸ்வரனின் ஒரு அம்சமான மாயா அம்சம்தான் நாம் காணும் அனுபவவிக்கும் இந்த உலகமாக காட்சி அளிக்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக சிலந்தி வலையைக் கூறலாம். சிலந்தியின் உடலின் ஒரு பகுதியிலிருந்து உருவானதுதான் இந்த சிலந்திவலை ஆகும். சிலந்திவலையும் சிலந்தியினுடைய வெளிப்பாடாகும். சிலந்தி தன்னிடம் உள்ள அறிவின் துணைகொண்டு தனது அழகான மெல்லிய வலையைப் பின்னுகிறது. அதேபோன்று ஈஸ்வரனின் உடலின் ஒரு பகுதி இந்த உலகமாக காட்சி அளிக்கிறது. ஈஸ்வரனின் மற்றொரு பகுதி உலகத்தில் அறிவு சொரூபமாக திகழ்கிறது அல்லது இயங்கி வருகிறது.

இந்த பிரபஞ்சத்தைப் படைத்த ஈஸ்வரன் இரு அம்சங்களாக இருக்கிறார். ஒன்று பிரம்ம அம்சம் மற்றொன்று மாயா அம்சம் என்று கூறப்படுகிறது. மாயா என்பது உடல் பகுதி அதனுள் இருக்கும் மற்றொரு பகுதி அறிவு என்னும் பிரம்ம அம்சம் ஆகும். ஜட அம்சமாக இருப்பது ஈஸ்வரனின் ஒரு அம்சமாக இருப்பது இந்த மாயா அம்சம் ஆகும். ஈஸ்வரனின் ஒரு அம்சமான மாயா அம்சம் மாற்றத்தை அடைந்து இந்த உலகமாக வரப்பெற்றுள்ளது. அதாவது நாம் காணும் உலகமாக காட்சி அளிக்கிறது. உலகத்தின் ஒரு பகுதி ஈஸ்வர தத்துவமாகவும் மற்றொரு பகுதி மாயா தத்துவமாகவும்

இருக்கிறது. பிரம்ம அம்சம், மாயா அம்சம் என இரு அம்சங்களாக ஈஸ்வரன் இருக்கிறார். அவர் இரு அம்சங்களாக இருந்து நாம் காணும் இந்த உலகத்தை சிருஷ்டித்துள்ளார். ஈஸ்வரனிடம் உள்ள பிரம்ம அம்சம், எவ்விதமான மாற்றத்தையும் அடையாமல், மாறாமல் நிரந்தரமாக நாம் காணும் உலகம் இயங்குவதற்கு ஆதாரசக்தியாக விளங்குகிறது.

மாயா அம்சம் ஈஸ்வரனின் பிரம்ம தத்துவத்திலிருந்து தோன்றியது. ஈஸ்வரனின் ஒரு அம்சமாகத் திகழும் இந்த மாயா அம்சம் என்பது நாம் காணும் இந்த உலகம் ஆகும். இந்த உலகத்திற்கு காரண தத்துவம் எது என்று சிந்தித்துப் பார்த்தால் பிரம்ம அம்சம், மாயா அம்சம் இரண்டும் சேர்ந்தது ஆகும். பிரம்ம தத்துவம் என்பது அறிவு சொரூபம் ஆகும். மாயா தத்துவம் என்பது ஜட சொரூபம் ஆகும். பிரம்ம தத்துவம் என்பது எந்த நிலையிலும் மாற்றத்தை அடையாத அறிவு சொரூபம் ஆகும். ஈஸ்வனின் படைப்பில் மாறிக்கொண்டே இருக்கும் தத்துவம் ஈஸ்வரனின் ஒரு அம்சமாகத் திகழும் மாயா தத்துவம் ஆகும். அதாவது ஈஸ்வரனின் ஒரு அம்சமான மாயா அம்சம் என்ற தத்துவம் மாறிக்கொண்டே இருக்கும். ஈஸ்வரனின் மற்றொரு அம்சமான பிரம்ம தத்துவம் மாறாமல் நித்திய தத்துவமாக இருக்கிறது.

அதாவது உலகில் எது அழியாமல் மாற்றம் அடையாமல் நிரந்தரமாக இருக்கிறதோ அது பிரம்ம தத்துவம் அல்லது ஈஸ்வர தத்துவம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஈஸ்வரனின் ஒரு அம்சமான பிரம்ம தத்துவத்திற்கு எந்தவிதமான குணங்களும் இல்லை. குணம் என்றால் மென்மையாக இருப்பது, கடினமாக இருப்பது, நகரும் தன்மையாக இருப்பது, ஜடமாக இருப்பது, பெரியது, சிறியது, திரவமாக இருப்பது, திடமாக, காற்றாக இருப்பது போன்ற குணங்கள் ஆகும். அப்படிப்பட்ட குணங்கள் எதுவும் ஈஸ்வரனின் ஒரு அம்சமான பிரம்ம தத்துவத்திற்கு இருப்பதில்லை. எனவே குணங்களற்ற பிரம்மத்தை நிர்க்குணம் என்று சாஸ்திரம் கூறப்படுகிறது. உலகில் எது அழியக்கூடியதாகவும் உருவம் செயல்பாடுகளில் மாற்றம் அடைந்துகொண்டே இருக்கிறதோ, நிரந்தரமில்லாமல் எண்ணற்ற குணங்களுடன் எவையெல்லாம் இருக்கிறதோ அல்லது காணப்படுகிறதோ, செயல்படுகிறதோ அது மாயா தத்துவம் என்று கூறப்படுகிறது.


எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்



ஈஸ்வரனின் ஒரு அம்சமான மாயா தத்துவம் என்பது பற்றி நாம் எளிதில் புரிந்துகொள்ள வேண்டுமானால் உலகில் எவையெல்லாம் அழியக்கூடிய தன்மையுடையதாக இருக்கிறதோ அது மாயா தத்துவம் என்று புரிந்து கொள்ளலாம். நாம் காணும் உலகத்தில் ஈஸ்வரனின் ஒரு அம்சமான மாயா தத்துவம் சத்துவ, ரஜோ, தமோ என மூன்று குணங்களின் அடிப்படையில்தான் இயங்குகிறது அல்லது உலகத்தில் அது வெளிப்படுத்துகிறது. மாயா தத்துவத்துக்கு பல்வேறு எண்ணற்ற குணங்கள் இருந்தாலும், அந்தக் குணங்கள் அனைத்தும் ரஜோ, தமோ சத்துவ என்ற மூன்று குணங்களிலே ஏதோ ஒரு குணத்தில் அடங்கி விடுகிறது அல்லது மூன்று குணங்களின் சேர்க்கையில் அது தன்னை வெளிபடுத்துகிறது. எடுத்துக்காட்டாக கலர் பென்சில்களை எடுத்துக் கொள்வோம். பொதுவாக வண்ணங்கள் என்றால் ஆறு அல்லது ஏழு வண்ணங்கள்தான் இருக்கும்.

உலகில் காணும் இந்த ஏழு வண்ணங்கள் வெவ்வேறு வண்ணங்களுடன் கலந்து எண்ணிக்கையற்ற புதிய வண்ணங்களை தற்போது உருவாக்கி விட்டது. புதிய வண்ணங்கள் உருவானாலும் ஏழு



வண்ணங்களின் அல்லது இரண்டு இரண்டுக்கு மேற்பட்ட வண்ணங்களின் சேர்க்கைதான் புதிய வண்ணங்கள் உருவாவதற்கு முக்கிய காரணமாக இருந்திருக்கும். அதுபோல்தான் மாயா அம்சம் எண்ணற்ற குணங்களை உலகத்தில் வெளிப்படுத்தினாலும் அது சத்துவ, ரஜோ, தமோ என மூன்று குணங்களில் ஏதாவதொரு குணத்தின் சேர்க்கையின் தன்மையில்தான் மாயா அம்சம் தன்னை வெளிப்படுத்தும், வெளிப்படுத்திக்கொண்டு இருக்கிறது.

பொதுவாக உலகில் காணும் எந்த ஒரு பொருளோ, செயல்பாடுகளோ சுதந்திரமாக இருக்கிறதோ அல்லது இயங்குகிறதோ அது சத்தியம் என்று கூறப்படுகிறது. அவ்வாறு இல்லாமல் அவைகள் ஏதோவொரு பொருளையோ ஏதோவொரு செயல்பாடுகளையோ சார்ந்து இருப்பதற்கு நித்யா என்று சாஸ்திரம் கூறுகிறது. ஈஸ்வரனின் ஒரு அம்சமான பிரம்ம தத்துவம் என்பது சத்தியம். ஈஸ்வரனின் மற்றொரு அம்சமான மாயா தத்துவம் என்பது நித்யா ஆகும். நித்யா என்பது உலகில் தனித்து இயங்குவதற்கு முடியாது. எடுத்துக்காட்டாக நமது நிழலை எடுத்துக் கொள்வோம். நிழல் என்பது தனித்து இயங்குவதற்கு முடியாது. அது நமது உடலையோ மற்ற பொருட்களையோ சார்ந்து இருந்தால்தான் நிழல் தன்னை வெளிப்படுத்துவதற்கு முடியும். அதைப்போல் இந்த மாயையும் ஏதோவொரு பொருளையோ, செயலையோ சார்ந்துதான் இயங்குகிறது அல்லது தன்னை வெளிபடுத்துகிறது. பொதுவாக மாயா அம்சத்தை நாம் எளிதில் புரிந்துகொள்வதற்கு முடிவதில்லை.

ஏதோ ஒன்று ஈஸ்வரனின் ஒரு அம்சமான பிரம்மத்தைச் சார்ந்து இருக்கிறது அதுதான் ஈஸ்வரனின் மற்றொரு அம்சமான மாயா அம்சம் என்று புரிந்துகொள்ள வேண்டும். இந்த மாயா தத்துவத்துக்கு நிரந்தரமான தன்மை எதுவும் இல்லை. இந்த உலகில் நாம் காணும் அனைத்துப் பகுதிகளும் பொருள்களும் காட்சிகளும் செயல்பாடுகளும் மாயா தத்துவம்தான். உலகத்தில் நிரந்தரமில்லாமல் எந்தப் பொருட்கள் , எந்தச் செயல்கள், எந்தக் காட்சிகள் எல்லாம் மாறிக்கொண்டே இருக்கிறதோ அது மாயையின் அம்சம் என்று உணர்ந்து கொள்ளலாம். மாற்றம்தான் ஈஸ்வரனின் ஒரு அம்சமான மாயா அம்சம் என்று எளிதில் புரிந்து கொள்ளலாம். மாயையின் மாற்றம்தான் நாம் காணும் இந்த பிரபஞ்சம் ஆகும். அதாவது உலகில் காணும் பொருட்கள் செயல்கள், காட்சிகள் அனைத்தும் மாயா அம்சம் ஆகும்.

மாயா தத்துவத்தின் மாற்றம்தான் நாம் காணும் உலகம் ஆகும். ஈஸ்வரனின் ஒரு அம்சமான மாயா அம்சம் என்பது இதுதான் என்று சுட்டிக் காட்டுவதற்கு முடியாது. காரணம் மாயா அம்சம் உலகில் காணும் பொருட்கள் செயல்கள், காட்சிகள் என்று அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கும் தன்மை உடையது. ஒரு திடப்பொருள் திரவமாகி, திரவம் காற்றாகவும் மாறி விடுவதை நாம் பார்க்கிறோம்.

எடுத்துக்காட்டாக நாம் ஒரு பனிக்கட்டியை ஒருவரிடம் சுட்டிக் காட்டி இது பனிக்கட்டி என்று உறுதியாகக் கூற முடியாது. காரணம் சிறிது நேரத்தில் அந்த பனிக்கட்டி உருகி தண்ணீர் நிலைக்கு வந்து விடும். உருகிய தண்ணீரை பனிக்கட்டி என்று கூறுவதா? அல்லது தண்ணீர் என்று கூறுவதா? என்று குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. அதுபோல்தான் மாயா தத்துவம் இந்த பிரபஞ்சத்தில் காணும் பொருட்கள் செயல்கள், காட்சிகள் என்று அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கிறது. அதனால் 'இதுதான் ஈஸ்வரனின் ஒரு அம்சம் மாயா அம்சம்' என்று நாம் சுட்டிக்காட்ட முடியாது. இந்த உலகத்தை ஒருகோணத்தில் மாயா அம்சம் என்றும் கூறலாம். மற்றொரு கோணத்தில் பிரபஞ்சத்தை ஈஸ்வரன் என்றும் கூறலாம். காரணம் மாயா அம்சமும் ஈஸ்வர அம்சமும் சேர்ந்ததுதான் நாம் காணும் இந்த உலகம் ஆகும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308





# பிரதோஷத்தை நடத்தினால் வேலை வாங்கிதரும் சிவன்

## தேன் பால் அபிஷேகம் செய்தால் குழந்தை வரம் தரும் அம்மன்

தொண்டை நன்நாட்டில் உள்ள மிகப் பழமை வாய்ந்த திருத்தலங்களுள் ஒன்றாக திகழ்கிறது பழங்காமூர் ஸ்ரீ காசிவிஸ்வநாதர் ஆலயம்.

ஈசனின் இடப்பாகம் பெற வேண்டி அம்பிகை, காஞ்சிபுரத்தில் இருந்து புறப்பட்டு அண்ணாமலை நோக்கி வரும் வழியில் ஓர் வாழைக்காட்டில் [கதலிவனம்] வாழைப்பந்தல் அமைக்கின்றர்.

மணல் லிங்கம் பிடித்து வழிபட எத்தனிக்கின்றாள், நீர்த் தேவை. உடன் தனது பிள்ளைகளான கணபதியையும், கந்தனையும் அழைத்து நீர் கொண்டுவர கட்டளையிடுகின்றாள். கணபதி மேற்கு நோக்கி சென்றார். அங்கே ஜவ்வாது மலை அடிவாரத்தில் தவத்தில் சிறந்த முனிவர்கள் ஏழ்வருள் ஒருவரான ஜமதக்னி முனிவர் தவம் செய்து கொண்டிருப்பதை காண்கிறார்.

குண்டலிபுரம் என்று முன்பு போற்றப்பட்ட படைவீட்டில் வாழ்ந்த இந்த முனிவர் கடுந்தவம் சீலர். அன்னை ரேணுகையின் கணவர். இவரை கண்டு, இவரது கமண்டலத்தை கண் நோக்கிய கணபதி காக உருவமெடுத்து, புனிதம் மிகுந்த அவரது கமண்டலத்தை கவிழ்க்க.... அதிலிருந்து கங்கையைக் காட்டிலும் புண்ணியம் மிகுந்த நீர் நதியாகப் பெருக்கெடுத்து ஓடியது. {இதற்கு முன்பு அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்து காவிரியை உற்பத்தி செய்துள்ளார் கணபதி} அந்நதியே கமண்டல நதியானது. இந்நதியின் தீர்த்தமானது கங்கை விடவும் கால் மடங்கு புண்ணியம் மிகுந்தது.

தர்மாரண்ய க்ஷேத்திரம் என்னும் ஆரணி வழியே அற்புதமான இந்த கமண்டல நதி பாய்ந்து வாழைப்பந்தலில் கந்தனால் உண்டான செய்யாற்றுடன் கலக்கின்றது.

இந்த தர்மாரண்ய க்ஷேத்திரத்தின் வடபுறம், கமண்டல நாகநதியின் வடகரையில் காசியைப் போன்றே அமையப்பெற்றுள்ள ஊர்தான் பழங்





காமநல்லூர் என்னும் பழங்காமூர்.

வாரணாசியைப் போன்றே இங்கும் ஸ்ரீ காசி விஸ்வநாதர் அன்னை விசாலாக்ஷியோடு கோயில் கொண்டெழுந்து அருள்பாலித்து வருகின்றார்.

திரேதாயுகத்தில் இத்தலத்தினில் ரிஷ்ய சிருங்கர் என்னும் கலைக்கோட்டு முனிவர் வாழ்ந்து வந்தார்.

இவர் பன்னெடுங்காலமாக கமண்டல நதி யில் ஸ்நானம் செய்து, வடகரையில் உள்ள ஸ்ரீ காசி விஸ்வநாதரை அனுதினமும் வழிபட்டு வந்தார்.

அப்போது ஒரு சமயம் வசிஷ்டரின்ஆலோ சனைப்படி தென்னகம் வந்த தசரதரின் வேண்டு கோளுக் கிணங்க அக்கரைக்கு (கமண்டல நதியின் தென்கரைக்கு ) சென்று புத்திரகாமேஷ்டி யாகத்தை அவருக்கு அற்புதமாய் நடத்தி தந்தார்.

மேலும் தசரத மஹாசக்கரவர்த்தி யின் விருப்பத்திற்கு இணங்கி, தசரதரின் துணை யோடு ஸ்ரீ புத்திரகாமேஷ்டி ஈஸ்வரரையும் நிறுவி, வழிபாடுகள் நடத்தினார்.

ரிஷ்யசிருங்கரின் காலத்திற்கும் முன்பே கமண்டல நதியின் வடகரையில் தானாக தோன்றியப் பெருமானாக ஸ்ரீ காசி விஸ்வநாதர் வீற்றெழுந்து அருள்பாலித்து வருவது சிறப்புக் குரியதாகும்.

ஊருக்குள்ளே வடபுறம் பழமைவாய்ந்த சிவாலயம் எழிலுற அமைப்பெற்றுள்ளது. கிழக்கு பார்த்த ஆலயத்தின் முன்னே தோரணவாயில் உள்ளது. இராஜகோபுரம் கிடையாது.

தோரணவாயில் கடந்து உள்ளே செல்ல....நேரே நந்தி தேவர், முன்னே பலிபீடம். இது முக மண்டபம் ஆகும். அதை தாண்டி இடை மண்டபம். தொடர்ந்து கருவறை. கருவறையுள் அழகிய லிங்கத் திருமேனிகொண்டு சற்றே இடதுபுறம் சாய்ந்த நிலையில் அற்புதமாகத் திருக்காட்சி தந்து அருள்புரிகின்றார் ஸ்ரீ காசி விசுவநாதர். அவரை மனமொன்றி வணங்கி, ஆலய வலம் வருகின்றோம்.

தென்புறமாக அரசும் வேம்பும் இணைந்து காணப்படுகிறன்து. அதன் கீழே நாகர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளது. அருகே நால்வர் தரிசனம். நிருர்தி திசையில் தல கணபதி சன்னதி கொண்டுள்ளார். மேற்கில் வள்ளி தெய்வானையுடன் ஸ்ரீ சண்முகர் எழுந்தருளு கின்றார்.

அம்பாள் சன்னதி இங்கு இறைவனுக்கு [வாமபாகத்தில்] இடப்புறம் உள்ளது.

அம்பிகையாக ஸ்ரீ விசாலாக்ஷி அம்பிகை புன்னகை ததும்ப புன்முறுவலுடன் அருள்மழை பொழிகின்றாள்.





வடக்கில் பைரவரும், ஈசான திசையில் நவகிரகங்களும், அருகே சூரியனும் வீற்றுள்ளனர். இங்கே தல விருட்சமான வில்வமரம் உள்ளது.

தினமும் ஒரு கால பூஜை நடந்திடும் இவ்வாலயத்தை ஊரார் துணை கொண்டு பகல் வேளைகளில் எப்போது வேண்டுமானாலும் தரிசனம் செய்யலாம்.

இவ்வாலயத்தில் மாதப் பிரதோஷங்கள், சித்திரை வருடப்பிறப்பு, ஐப்பசி அன்னாபிஷேகம், கார்த்திகை தீபம், தைப்பொங்கல், பங்குனி உத்திர திருக்கல்யாண உற்சவம் ஆகிய விசேடங்கள் சிறப்புற நடத்தப் படுகின்றன.

இத்தல அம்பாளுக்கு மாங்கல்யம் சாற்றுவதாக வேண்டிக்கொள்ள உடன் மாங்கல்ய பாக்கியம் கிட்டும்.

நாகதோஷத்தால் பாதிப் படைந்தவர்கள், இங்கு நாக பிரதிஷ்டையை முறைப்படி செய்து, தோஷநிவர்த்தி அடைகின்றனர்.



மோ.கணேஷ்

சிறந்த வேலை வேண்டுவோர் பிரதோஷத்தை நடத்திட, வேண்டிய வேலை கிடைக்கப் பெறுகின்றனர்.

பிள்ளைச் செல்வம்இல்லாதோர் சுவாமி அம்பாளுக்கு தேன் கலந்த பால் மற்றும் தயிரினால் அபிஷேகம் செய்து, விரைவில் பலனடைகின்றனர்.

இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடந்து பல வருடங்கள் ஆனதால் குட முழுக்கு காண வேண்டிய அவசிய நிலையில் உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டத்தில், ஆரணியில் இருந்து செய்யார் செல்லும் வழியில் ஆரணியிலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது பழங்காமூர்.

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

# தயாராகிறது...

உலக புகழ்பெற்ற மதுரை சித்திரை திருவிழா சிறப்புகள், வைகை ஆற்றில் கள்ளழகர், திருப்பதி ஏழுமலையான் மகிமைகள், நலம் தரும் நவ திருப்பதிகள், தென் திருப்பதி ஸ்தலங்கள், திருப்பதி ஏழுமலையான் காட்சி கொடுத்த அப்பன் பெருமாள் கோவில் போன்ற பல ஆன்மிக அற்புத தகவல்களுடன் உயர்ரக ஆர்ட் பேப்பரில் பல வண்ணத்தில் தயாராகி வருகிறது.



## உலகப் புகழ்பெற்ற மதுரை சித்திரை திருவிழா

### சிறப்பு மலர்

விளம்பரம் மற்றும் பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளவும்

Cell: 9994323622 9444228203

# மனதிலே மாசு இருந்தால் அறிவின் முன் திரையாக விழும்

நியாயம் என்பது தியாகம் விளங்குகின்ற தன்மை. தியாகம் என்பது விளங்குகின்ற மனிதர்களைப் பார்த்தல்.

● ● ●

உணவுக்கு மேல் எந்த அரசியலும் செய்யலாகாது. அரசியல் உணவில்தான்; வேறு எதிலும் இல்லை.

● ● ●

உணவுக்கு மேல் எந்த அரசியலும் செய்யலாகாது. அரசியல் உணவில்தான்; வேறு எதிலும் இல்லை.

● ● ●

எரிகின்ற தீவட்டியில் தூசு தும்பு விழாது. விழுந்தாலும் எரிந்து விடும். தீவட்டி போல் வாழ்க்கை இருக்க வேண்டும்.

● ● ●

குருவை ஏற்றுக் கொள். பணிவு உடனே பிறந்துவிடும்.

● ● ●

அறிவை சரி பார்த்துக் கொள். பணிவு பிறந்துவிடும்.

● ● ●

இறைவனுக்காக உடம்பு அடிமையாக வேலை செய்து தேய்ந்து கொண்டே இருந்தால் பக்தி ரசம் ஏற்பட்டுவிடும்.

● ● ●

தரிசனம் கண்டால் சந்தேகம் எல்லாம் நிவர்த்தி.

● ● ●

மனிதனுக்கு பழைய ஞானமும், புதிய ஞானமும் வரவேண்டும். வந்தால் நிம்மதி.

● ● ●

நம் பணி என்றென்றும் உண்மைக்கு பணி செய்து கிடப்பதே.

● ● ●

புத்தியை புரிந்து கொண்டவனே கடவுளை மெய்யாக்குகிறான்.

● ● ●

சிந்தனையை தூண்டுவது என்பதே ஒரு நேருக்கு நேரான பணி தான்.

● ● ●

நாடு புத்தனை ஒதுக்கிவிட்டதால் நேருக்கு நேரான பணி சிந்தனை துறையில் இல்லை.

● ● ●

நீ சிந்தித்து செயல்பட துவங்கி விட்டாய் என்பது குருவுக்குத் தெரியவேண்டாம். நீ உணர்ந்தால் போதும்.

● ● ●

படிப்பறிவு உள்ள பக்தனே அந்நாட்டின் மிகப்பெரிய ஆயுதம்.

● ● ●

ஒவ்வொரு தனி மனிதனும் பாரத நாடே; ஒவ்வொரு தனி மனிதனும் தமிழ் நாடே. இதுவே புத்தன் வழி.

● ● ●

ஒவ்வொரு மனிதனும் தனது பொறுப்பை உணர்ந்தால் தான் நாடு வளரும்.


● ● ●



மக்களே! ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதீர்கள். முன்னேற வேண்டிய நாட்டில் ஆடம்பரம் புனிதமல்ல.

● ● ●

உழைப்பை செய்தாலன்றி மனிதனும், நாடும், சங்கமும், கோயிலும், ஒரு பொது ஸ்தாபனமும் வளராது.




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


•••

கோபத்திற்கு விடுமுறை தருவது பொறுமை.

•••

நல்ல சிந்தனைகளுக்கு உலகிலே மாற்றுச் சிந்தனைகளே கிடையாது.

•••

குறைவான பொருள் இருந்தால் தான் மாற்றுச் சிந்தனை பிறக்கும்.

•••

அறிவுப் பஞ்சம் சிந்தனை இல்லாத்தன்மை இவைகள் வரக்கூடாது.

•••

நம்பிக்கை அல்லது அவநம்பிக்கை என்பதெல்லாம் சமயத்துறையைப் பொறுத்தவரை அதிகமான சொற்களே.

•••

மனதிலே மாசு இருந்தால் நமது அறிவின் முன் திரையாக விழும்

•••

பொருள் தெரிந்து இறைவனைச் சுற்றி வணங்கினால் அடக்கமும் பக்தியும் வரும்.

•••

மனித உள்ளம் உடல் நாகரீகத்தைப் போன்று வளர்ந்தால்தான் கொண்டாட்டங்கள் இனிக்கும்.

•••

தொழில் செய்பவனே மனிதன். இதுவே 'மே தின' வாழ்த்து.

•••

வெறுப்புள்ள மனிதன் எவருக்குமே பயன்படுவதில்லை.

•••

ஆண்டவனை உணராத மயக்கம் சமாதியல்ல.. மயக்கமே. குரு உபதேசம் செய்துவிட்டு, சீடனை விட்டு பிரிய வேண்டும்.

•••

உண்மையை மாற்றி எழுதினால் மனிதனிடம் அவநம்பிக்கை வந்துவிட்டது என்றே பொருள்.

•••

ஆன்மீக வளர்ச்சி வாழ்க்கையாக வேண்டுமா வேண்டாமா?– இதற்கு பதில் சொல்ல முடியாத நிலை யில்தான் மனிதன் வாழ்க்கையைப் பற்றி பேசுகிறான்.

•••

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# தமிழ்புத்தாண்டும் கொண்டாடும் வழிமுறையும்

தமிழர்களது காலக்கணிப்பு முறையின்படி ஒரு ஆண்டுக்குரிய பன்னிரெண்டு மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாக கருதப்படுகிறது.

தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப் படுகின்றன. ஏன் என்றால், இம் மாதங்கள் பூமிக்குச் சார்பாகத் தோற்றுகின்ற சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப் படுகின்றன. இராசிச் சக்கரத்தில் மேஷ இராசிக் குள் சூரியன் நுழைவதிலிருந்து அந்த இராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதமாகும்.

சித்திரை மாதம் முதல் நாளைத் உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழ் வருடப் பிறப்பாக சிறப்பாக கொண்டாடுகின்றனர். புதிய எதிர் பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும்வைத்து மங்களகரமான திருநாளாக சித்திரைப் புது வருடம் வரவேற்கப்படுகிறது.

சித்திரை மாதம் பிறந்ததுமே இளவேனில் காலம்' என்னும் வசந்த காலம் தொடங்குகிறது.

வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர் களும், மலர்களும் பூத்துக் குலுங்கும். அச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும், கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக இச்செயற்பாடு கருதப்படுகிறது.

ஐக்கியம், சமய, சமூக, கலாசார உறவுகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவைகளை எடுத் துக் காட்டும் வகையிலும் நல்லெண்ணம், நல் லுறவு, ஐக்கியம், அன்புப் பரிமாற்றம், குதூகலம், விருந்தோம்பல் போன்ற மனிதப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகை யிலும் கொண்டாடப்படும் சமூக விழாவான புது வருடத்தில் இறைவழிபாடு, தானதர்மம், ஆசிபெறுதல் என்பவைகளையும் நாம் கடைப் பிடிப்பது வழக்கம்.

சித்திரை முதல் நாளன்று வீட்டை நன்றாக கூட்டி தூய்மை செய்ய வேண்டும். வாசலில் கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். வாயிற்படிகளுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு, மாவிலைத் தோரணங்களை கட்டி மங்கலம் சேர்க்கவேண்டும். வாயிற்படி நிலைவாயிலில் மஞ்சள் பூசி, சாணத்தால் மெழுகி, அழகிய மாக் கோலமிட்டால் திருமகள் வாசம் செய்வாள் என்பது நம்பிக்கையாகும்.

மஞ்சள், குங்குமம் நோய்க்கிருமிகளும் துஷ்ட தேவதைகளும் வாசல்படியை தாண்டி வராமல் தடுக்கும் சக்திகளாகும். புதுவருட தினத்தில் நம் நலம் காக்கவே இந்நடைமுறை வழக்கத்துக்கு வந்தது.

### மருத்து நீர்

இந்த புண்ணிய காலத்தில் சகலரும் மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையையும், காலில் புங்கம் இலையையும் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும். மருத்து நீர் வைத்தல் என்பது முக்கிய விஷயமாக புதுவருட தினத்தில் கருதப்படுகிறது.

இம்மருத்துநீர் தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள்,



திற்பலி மற்றும் சுக்கு என்பவற்றை நீரிலே கலந்து காய்ச்சப்படும். மருத்து நீர் வைத்து நீராடினால் புத்தாண்டின் நல்ல பலன்களை பெறலாம்.

### ஆடை

பச்சைநிறப்பட்டாடை அல்லது வெள்ளைக்கரை அமைந்த புதிய பட்டாடையையும், மரகதம் வைரம் பதித்த ஆபரணங்களையும் அணிந்து ஆலயங் களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும் என வாக்கிய பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருக்கணிதபஞ்சாங் கத்தில் வெண்மஞ்சள் பட்டாடை அல்லது மஞ்சள் கரைவைத்த வெள்ளைப் புத்தாடை யையும் அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும்.

சித்திரை புதுவருடமன்று நம் வருங்கால பலன்களை அறிவது அவசியம். புத்தாண்டு பஞ் சாங்கம் வாங்கி அதற்கு சந்தனம், குங்குமம் ஆகியன இட்டு, பூஜையில் வைத்து பூஜிக்க வேண்டும்.

புதுவருட தினத்தில் தான தருமங்கள் செய்வது வழக்கம். ஏழைகளுக்கும், உறவினர் களுக்கும் புதிய விசிறிகளை தானம் செய்ய வேண்டும். சித்திரை பிறப்பதற்கு முந்தைய நாள் இரவு சாப்பாடு முடிந்தபிறகு பூஜை அறையை தூய்மை செய்து கோலமிட்டு வைத்து விட வேண்டும். வீட்டிலுள்ள பொன், வெள்ளி நகைகள், உட்பட அனைத்து ஆபரணங்களையும் பணம், நிலைக்கண்ணாடி, வெற்றிலை, பாக்கு, பழங்கள், தேங்காய், மலர்கள் முதலிய மங்கலப் பொருள்களையும் தயாரித்து, ஒரு மனையின் மீது இட்டு அதற்கு அழகியகோலமிட்டு, பூஜைக்குரிய தெய்வத்தின் முன் வைக்க வேண்டும்.

அரிசி, பருப்பு, வெல்லம், பலா, மாம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றையும் வைத்து மறுநாள் காலை, சித்திரை மாதப்பிறப்பன்று அதிகாலையில் முதன் முதலாக வீட்டில் மூத்த பெண்மணி எழுந்து குளித்து புத்தாடை உடுத்தி இறைவன் முன்பு குத்துவிளக்குகளையும், ஊது வத்திகளையும் ஏற்றி வைப்பார். அதற்கு பின்பு, அவர் வீட்டில் தூங்கும் ஒவ்வொருவரையும் எழுப்பி, கண்களை மூடிய நிலையிலேயே சுவாமியின் முன்பு அழைத்துச் சென்று, கண்களை திறக்கச் சொல்வார். பூஜைக்குரிய தெய்வத்தையும், பூஜைக்கு வைத்துள்ள மங்கலப் பொருட்களையும் முதன் முதலாக தரிசிக்கும்படி செய்வார். இவ்வாறு செய்தால் வருடம் முழுவதும் மகிழ்ச்சி பொங்கும் எனவும் மங்கலப் பொருள்கள் செழித்து இருக்கும் என்பது நம்பிக்கை.

### அறுசுவை உணவு

சித்திரை மாதத்தில் சூரியன் மேஷ ராசியில்மிக வும் உச்சமாக பிரகாசிப்பதால்அன் றைய தினம் பானகம், நீர், மோர், பருப்புவடை ஆகியவற்றை நைவேத் தியம் செய்யவேண்டும். இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவை கொண்ட உணவுகளை சமைத்து உண்பர். மதிய உணவில் வேப்பம்பூ பச்சடி, மாங்காய்ப் பச்சடி, பருப்பு வடை, நீர்மோர், பருப்பு, பாயாசம், மசால்வடை போன்றன இடம்பெறுதல் அவசியம். வேப்பம் பூ கசக்கும் என்றாலும் மனித உடலிலுள்ள ரத்தத்தை தூய்மை செய்வதில் வேப்பம் பூவுக்கு நிகராக வேறு எந்த மூலிகையும் இல்லை. இதற் காகவே இந்த உணவு உண்ணப்படுகிறது.



அழகுராஜா

### கைவிஷேஷம்

சித்திரைப் புதுவருடத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் கைவிசேடமாகும். ஆரம்ப காலத்தில் வீட்டின் தலைவி உரிய சுப நேரத்தில் சிறிய மூலிகைப் பொட்டலம் ஒன்றினை கிணற்றுக்குள் போட்டுவிட்டு பிறக்கும் புத்தாண்டு நிமித்தம் முதல் முறையாக தண்ணீரை கிணற்றிலிருந்து வெளியில் எடுப்பதையே கை விஷேஷமாக கருதப்பட்டது. ஆயினும் நாளடவில் கைவிசேஷம் என்பது சுபமுகூர்த்தத்தில் பணத்தை கொடுப்பதும் எடுப்பதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நல்ல நேரத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும், வயதில் மூத்தவர்களிடமிருந்து புதுவருடத்தில் முதல் அன்பளிப்பாக வெற்றிலையில் பாக்கு, நெல்லு காசு என்பவற்றை வைத்து குத்து விளக்கின் முன்னாலே வைத்து கொடுப்பர்கள். பணத்தை கைவிசேஷமாக பெற்றுக்கொள்வார்கள்.

கொடுக்கபட்ட எல்லாவற்றையும் எண்ணி (நெல்லு உட்பட) அது ஒற்றை விழுந்தால் நல்ல பலன் என்பது ஐதீகம். கைவிஷேஷம் பரிமாறிக்கொள்வது என்பது ஒரு பாரம்பரியமான வழக்கமாகும். ஒருசில கிராம வழக்கப்படி, மூத்தோர்களிட மிருந்து கைவிஷேஷம் பெற்றால் அந்த ஆண்டு முழுவதும் பணவரவும் பல நன்மைகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கைவிஷேஷமாக பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது.

இந்தியாவில் தமிழகத்தில் மட்டும் சித்திரையை மிக விஷேஷமாக கொண்டாடினாலும், உலக அளவில், இலங்கையில் சித்திரை விழா என்பது தேசிய திருவிழாவாக கொண்டாடப் படுகிறது. சித்திரைப் புதுவருடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பெருவிழாவாக சிங்கப்பூர், மலே சியா போன்ற நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இங்கு தமி ழையும் தமிழ் மொழியையும் சிறப் பிக்கப்படுகிறது.

புத்தாண்டு பிறக்கும் செய்தியினை 'குயில்' தன் குர லால் உலகறியச் செய்வதாக நம்பப் படுகின்றது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994323622






பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
கீதாசமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# சரணாகதி தத்துவத்திற்கு மனதை மாற்றினால் புடம்போட்ட தங்கமாவோம்



இறைவன் ஒருவனே நோக்கமாக இருக்கும் போது அவனை அடைவதற்கு வழிகள் பலவாக இருக்கும்.

நோக்கத்தை அடைந்தால் போதும் வழிமுறை பற்றி கவலைப்படக்கூடாது என்பது எழுதப்படாத விதி.

இதனால்தான் இந்து மதத்தில்ஒவ்வொரு மகானும், ஞானிகளும் ஒவ் வொரு வழிமுறை களில் இறைவனைஅடைந்துள்ள தாக அவர் களின் வரலாற்றுக் குறிப்பின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்து மதத்தில் இன்னுமொரு சிறப்பு என்ன வென்றால், மனிதர்கள் மட்டுமின்றி, ஓரறிவு பூச்சிகள் முதற்கொண்டு ஐந்தறிவு விலங்குகள் வரை இறைவனிடம் ஐக்கியமாகியுள்ளதாக வர லாறு நிகழ்வுகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

இதில், அதிகப்படியான உயிரினங்கள் முதற்கொண்டு மனிதர்கள் வரை சரணாகதி என்ற தத்துவத்தின் மூலம் இறைவனை அடைந் துள்ளதை ஆராய்ந்து பார்த்தால் அறிந்து கொள்ளலாம்.

சரி சரணாகதி என்றால் என்ன?

இறைவனிடம் சரணாகதி எப்படி அடைவது என்ற குழப்பம் மனதில் எழும்.

இதற்கு விடை எளிதாக அறிந்து கொள்ளலாம்.



என் வாழ்க்கையில் நடைபெறும் அனைத்திற்கும் இறைவனே பொறுப்பு, நன்மை நடந்தாலும், தீமை நடந்தாலும் அதை ஏற்றுக் கொள்வது நானல்ல இறைவனே... ஏதோ ஒரு காரணத்தை அறிந்து கொள்ளவே இறைவன் எனக்கு இந்த நன்மை, தீமையை கொடுக்கிறான். என்றமனோ நிலையில் அனைத்தையும் ஏற்றுக் கொண்டு இறைவனை தொடர்ந்து வணங்கி வந் தால் போதும், நாம் இறைவனிடம் சரணாகதி தத்துவத்தில் முதல்படியில் காலடி எடுத்து வைத்துவிட்டோம் என்று பொருள்.

இறைவனை வணங்குகிறோம், பிறகு எதற்கு அவன் நமக்கு துன்பத்தை தரவேண்டும், வெறும் இன்பத்தை மட்டுமே கொடுக்கக் கூடாதா? என்ற கேள்வி மனதின் ஓரத்தில், ஏதோ ஒரு துன்பத்தை அனுபவிக்கும்போது நம்மை தூண்டிவிட்டு, இறைவனை வெறுக்க வைக்கும் சூழ்ச்சியை மன மாயை செய்யும்.

இறைவன் அந்த துன்பத்தை தருவது என்னைப் பக்குவப்படுத்தவே தவிற என்னை கலங்கடிக்க அல்ல, என்று அந்த மாயையின் முகத்தில் அறைந்தாற்போல, நம் மனம் கூறினால் துன்பத்தின் வீரியம் தன்னால் குறைய ஆரம்பிக்கும்.

இதை இன்னும் எளிமையாக புரிந்து கொள்ள ஒரு புராண கதையைப் பார்ப்போம்...

கிருஷ்ணர் தினந்தோறும் தோட்டத்திற்குச் சென்று, தான் வளர்க்கும் செடி கொடிகளிடமும் "நான் உங்களை நேசிக்கிறேன்" எனக் கூறுவார்.

இதனால் செடி, கொடிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்து, "நாங்களும் உங்களை விரும்புகிறோம்" எனக் கூறுவதுண்டு.

ஒரு நாள் ஸ்ரீ கிருஷ்ணர், சற்று கலவரத்துடன் அவசரமாக தோட்டத்திற்குள் நுழைந்தார். தான் வளர்த்த மூங்கில் செடியிடம் சென்றார்...

கிருஷ்ணரின் கலவரம் மிகுந்த முகத்தைப் பார்த்த மூங்கில் செடியும் அவரிடம் பேசலானது.

"என்னவாயிற்று? ஏன் கலவரமாக இருக்கிறீர்கள்" எனக் கேட்டது.

அதற்குக் கிருஷ்ணர்,

"எனக்கு உன்னிடம் ஒன்று கேட்க

வேண்டும்... ஆனால் அது மிகவும் கஷ்டமானது" என கூறினார்...

"இறைவனான தங்களுக்கு எதுவானாலும் கொடுக்கத் தயார்" என மூங்கில்செடி பதில் கூறியது.

உடனே கிருஷ்ணர், "எனக்கு உன்உயிர் வேண்டும்... அதற்கு நான் உன்னை வெட்டவேண்டும்" என்றார்.

"என்னை காக்கும் இறைவனே நீங்கள்தான், எந்தக் காரணம் கொண்டும் உங்களால் எனக்கு தீங்கு நேரப்போவதில்லை என்பது எனக்கு நன்றாக தெரியும், ஆனாலும்... நீங்கள் என்னை வெட்டப்போகிறேன் என்று கூறுகிறீர்கள், கண்டிப்பாக அதில் ஏதோ ஒரு காரணம் இருக்கும், காரணம் இல்லாமல் உங்களை சரணடைந்தருக்கு துன்பத்தை நீங்கள் தரமாட்டீர்கள் என்பது எனக்கு தெரியும், அதனால் தாராளமாக என்னை வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி, மூங்கில் சரணாகதி அடைந்து தன்னை அர்ப்பணித்தது.

கிருஷ்ணர் மூங்கிலை வெட்டி, அதனுள் துளை கள் செய்தார். வலி தாங்க முடியாமல், மூங்கில் அழுது கொண்டே சகித்துக் கொண்டது!

எல்லா வேதனைகளையும், வலிகளையும் சகித்த பின், அது ஒரு அழகான புல்லாங்குழலாக மாறியது...!

பல்வேறு துன்பங்களை அனுபவித்தாலும், மூங்கிலுக்குள் இருந்து இனிமையான இசையை கடவுளே இசைக்கத் தொடங்கினார்.

இறைவனின் மூச்சுக்காற்று பட்டு புல்லாங் குழலிலிருந்து வந்த இசை, உலகமே ரசித்து மயங்கும் அளவிற்கு இன்பமயமாக இருந்ததால், உலகே கிருஷ்ணரின் புல்லாங்குழல் இசைக்கு அடிமையாக மாறியது.

பல துன்பங்களை அனுபவித்த மூங்கில் அழகிய புல்லாங்குழலாக மாறியதும் அதன் மீது கிருஷ்ணருக்கு அதித பற்று ஏற்பட்டது.

கிருஷ்ணர் நாள் முழுவதும், 24 மணி நேரமும் தன்னிடமே தன்கைப்பட அந்தப் புல்லாங்குழலை தன்னிடமே வைத்திருந்தார். கிருஷ்ணரின் நிரந்தர உடைமையாக புல்லாங்குழல் மாறியது.

இதைக் கண்டு கோபியர்கள் பொறாமை அடைந்தனர். அவர்கள் புல்லாங்குழலிடம்,

"கிருஷ்ணர் எங்கள் கடவுள்; ஆனால் எங்களுக்கு அவருடன் சிறிது சமயம் தான் கழிக்க முடிகிறது... ஆனால் அவர் உன்னுடன் தூங்கி, எழுந்தது முதற்கொண்டு உன்னுடன் இருக்கிறார்" என கூறினார்கள்; ஒரு நாள் புல்லாங்குழலிடம் அந்த ரகசியத்தைக் கேட்டனர். அதற்கு புல்லாங்குழல்,

"எனக்குள் ஒன்றுமே இல்லை என்பது தான் அந்த ரகசியம்.!..ஆம் .. கடவுள் என்னை என்ன வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றிக் கொள் ளுங்கள் என்று பூரண சரணாகதி அடைந்தேன், அவரும் எனக்கு பல்வேறு வலிகளைக் கொடுத்தார். அதை ஏற்றுகொண்டு இறைவனே கதியென்று அவரிடம் விடாத பற்று கொண்டேன், இன்று கிருஷ்ணரின் நிரந்தர உடைமையாக மாறிவிட்டேன், எந்த சூழ்நிலையிலும் என்னை விடாமல் என்னை அவருடனேயே வைத்துக் கொள்கிறார்" என கூறியது.

இதுதான் பூரண சரணாகதி தத்துவமாகும், கடவுள் நம்மை எப்படி வேண்டுமானாலும், மாற்றட்டும் என்று நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். அதற்காக பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு, நாம் நம்மை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பூரண சரணாகதியில் மனதை செலுத்தும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக புடத்தில் போட்ட தங்கம் போன்று மினுமினுப்பை பெறுவார்.

பாதையைதேடி.
போன்: 9444228203





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
**சந்தா**

**UPI மற்றும் வங்கி**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**